# இலங்கைத் தமிழ் வணிக கணங்களும் நகரங்களும் (கி. பி. 1000 - 1250)

சி. பத்மநாதன்

இலங்கையிற் சோழராட்சி ஏற்பட்டதிலிருந்து பதின்மூன்றாம் நூற்றாண்டுவரையான காலப் பகுதியிலே தமிழ் வணிகர் குழாங்கள்பல சமுதாயத்திற் பெருஞ்செல்வாக்குப் பெற்றிருந்தன. தென்னிந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான அரசியல், வாணிப, கலாசாரத் தொடர்புகளின் பயனாகவே **திசையாயிரத்து ஐந்நூற்றுவர், வீரவளஞ்சியர், நானாதேசிகள்** முதலான வணிகர் அமைப்புக்கள் இலங்கையில் வளர்ச்சியடைந்தன. கிறீஸ்து சகாப்தத்திற்கு முற்பட்ட நூற்றாண்டுகளிலிருந்து தொடர்ச்சியாகவே இலங்கைக்கும் தென்னிந்தியாவுக்குமிடையில் வாணிபம் நடைபெற்றுவந்தது. இலங்கையில் உற்பத்தியான முத்து, இரத்தினம், யானைத் தந்தம் முதலான போகப் பொருட்கள் அதிக பெறுமதி வாய்ந்தனவாயிருந்தன. பல நாடுகளிலுள்ள உயர்ந்தோர் குழாத்தினர்கள் அத்தகைய பொருள்களை விரும்பிப் பயன்படுத்தினர்கள். அவை தென்னிந்தியத் துறைமுகங்களுக்கு ஏற்றிச் செல்லப்பட்டு, அங்கிருந்து கடல் வழியாகவும் தரை வழியாகவும் தூரதேசங்களுக்கு அனுப்பப்பட்டன. இலங்கைக்குத் தேவைப்பட்ட துணி வகைகள், உணவுப் பொருள்கள், உலோகப் பொருள்கள் முதலியவற்றுட் குறிப்பிடத்தக்க பகுதி தென்னிந்தியத் துறைமுகங்களினூடாக அங்கு எடுத்துச் செல்லப்பட்டன. புராதன காலத்திலிருந்து தென்னிந்தியாவும் இலங்கையும் ஒரே வர்த்தக நிலையமாக இணைந்திருந்தன.

**பாக்குநீரிணை** வழியான இந்திய — இலங்கை வர்த்தகம் பெரும்பாலும் தமிழக வணிகர் வசமாயிருந்தது குறிப்பிடத்தக்கது. தமிழக வணிகரின் நடமாட்டங்களும் நடவடிக்கைகளும் இலங்கையின் துறைமுகப் பட்டினங்களிலும் அவற்றை அடுத்துள்ள கரையோரப் பகுதிகளிலும் நகரங்களிலும் தமிழரின் குடியேற்றங்கள் ஏற்படுவதற்கு வழியமைத்தன. கி. பி. பத்தாம் நூற்றாண்டிலிருந்து இலங்கையிலே தமிழ் வணிகரின் செல்வாக்கு மிகக் கூடுதலான அளவிலே ஏற்படலாயிற்று. கூட்டுறவு முறையிலமைந்த தமிழ் வணிகரமைப்புக்கள் அக்காலத்திலிருந்து இலங்கை வர்த்தகத்திலே பங்கு கொள்ளத் தொடங்கியமை குறிப்பிடத்தக்கது. அத்தகைய அமைப்புக்கள் இலங்கை வாணிபத்திலும் சமுதாயத்திலும் ஏற்படுத்தியிருந்த செல்வாக்கினைத் தெளிவான முறையிற் புரிந்து கொள்வதற்குத் தென்னிந்தியாவிலே **அய்யாவொளே, வீரவளஞ்சியர், நானாதேசிகள்** போன்ற கூட்டத்தவர் உருவாகி வளர்ச்சியடைந்தமையினை இங்கு சுருக்கமாக எடுத்துரைப்பது அவசியமாகின்றது.

## தென்னிந்திய வணிகர்

கர்நாடகத்திலும் தமிழகத்திலும் முறையே வாதாபிச்சாளுக்கியரும் காஞ்சிப் பல்லவரும் ஆட்சிபுரிந்த காலத்தில் — குறிப்பாக எட்டாம் நூற்

றாண்டிலிருந்து – **அய்யாவொளே, வளஞ்சியர்** முதலான வணிகரமைப்புக்கள் தோன்றலாயின. சாளுக்கியரின் பிரதான நகரங்களுள் ஒன்றாகிய ஐகொளே என்னும் நகரமே அய்யாவொளே என்ற வணிகரமைப்பின் உற்பத்தித் தானமாகும்.[1] வாணிப விருத்தியால் பெருவளர்ச்சி பெற்ற நகரங்களுள் ஐகொளே என்பதும் ஒன்றாகும். அங்கு பெருந்தொகையில் அமைக்கப் பெற்றிருந்த இந்துக் கோயில்களும் சமணப் பள்ளிகளும் அவற்றின் அழிபாடுகளிடையிற் காணப்படும் சாசனங்களும் ஐகொளே நகரம் வாதாபிச் சாளுக்கியரின் காலத்தில் எத்தகைய வளத்தினைப் பெற்றிருந்தது என்பதை உணர்த்துகின்றன. அய்யாவொளே வணிகரின் சாசனங்களிற் காலத்தால் மிக முற்பட்டவை ஐகொளே நகரிலே காணப்படுகின்றன. அவை எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. ஐகொளே நகரிலே உற்பத்தியான பெருவணிகரமைப்பொன்றிற்கு **அய்யாவொளேய ஐநூர்வ்வர ஸ்வாமிகளு** என்னும் பெயர் உருவாகியது. கர்நாடகம், தெலுங்கு தேசம், தமிழகம், மலையாளம் முதலியவற்றில் **அய்யாவொளே** வணிகர் வாணிப நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். எனவே அங்கெல்லாம் அவர்களுடைய நிலையங்களும் செல்வாக்கும் ஏற்பட்டன. **அய்யாவொளே** அமைப்புடன் தொடர்பு கொண்டிருந்த வணிகர் கூட்டங்கள் பல காலப்போக்கில் அதன் பெயரைக்கொண்டு அழைக்கப்பெற்றன. சோழர் காலத்திலே தமிழகத்திற் பெருஞ்சிறப்புப் பெற்றிருந்த 'திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர்' தமிழ்ச் சாசனங்களிலே 'ஸ்ரீ, அய்யப்பொழில்புர பரமேஸ்வரிக்கு மக்களாகிய'வர் என்று வர்ணிக்கப்பட்டுள்ளமை அவர்களுக்கும் **அய்யாவொளே** வணிகருக்கும் இடையிலான தொடர்பினைக் குறிப்பதாயுள்ளது. நானாதேசி, வீரவளஞ்சியர், மணிக்கிராமம் முதலிய பிற வணிகரமைப்புக்களும் எட்டாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட தென்னிந்திய சாசனங்களிலே குறிப்பிடப்படுகின்றன.

கூட்டுறவு முறையிலமைந்த வணிகர் சங்கங்கள் புராதனகால இந்தியாவில் வளர்ச்சியடைந்திருந்தன. அவற்றை **ஸ்ரேணி, நிகம, பூக** எனப் பலவாறு இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. பௌத்த சாதகக் கதைகள், இதிகாசங்கள், தர்மசாஸ்திரங்கள் போன்ற இலக்கியங்களிலும் பல்வேறு பகுகளிலுள்ள சாசனங்களிலும் அவற்றைப்பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. சங்ககாலத் தமிழ் நூல்களில் **சாத்து** என்னும் வணிகர் கணம் குறிப்பிடப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. ஆயினும், அவற்றிற்கும் பிற்பட்ட காலத்து அய்யாவொளே முதலிய தென்னிந்திய வணிகர் கணங்களுக்கும் எந்தவிதமான தொடர்புகளும் இருப்பதாகத் தெரியவில்லை. அய்யாவொளே போன்ற (தென்னிந்தியாவில் உருவாகிய) வணிகர் கணங்கள் மராட்டிய தேசத்திற்கு வடக்கிலேசென்று வாணிபம் நடாத்தியதற்குச் சான்றில்லை, இந்தியாவிலே பெரும்பான்மையும் திராவிட மொழிகள் வழங்கிய பிரதேசங்களே அவற்றின் வாணிப வலயத்துள் அடங்கியிருந்தன. அவை கடல்வழி வர்த்தகத்திலும் பங்கு கொண்டிருந்தன.

எட்டாம் நூற்றாண்டிலிருந்து தென்னிந்திய சமுதாய வரலாற்றில் வணிகர் சங்கங்களின் வளர்ச்சி ஒரு பிரதான அம்சமாய் அமைகின்றது. அது பொருளாதார அமைப்பிலும் வாணிபத்திலும் ஏற்பட்ட வளர்ச்சியின் பிரதிபலிப்பாகவே கொள்ளத்தக்கது. எட்டாம் நூற்றாண்டிலே

அராபியர் வனாந்தரப் பிரதேசங்களிலிருந்து வெளிப்பட்டு மேற்காசியா, பாரசீகம், மத்தியாசியா, வடஆபிரிக்கா முதலியவற்றைக் கைப்பற்றி வலிமை மிக்கதான பேரரசொன்றினை நிறுவினார்கள். ஆசிய - ஐரோப்பிய வர்த்தகத்தின் உயிர்நாடியான தரைவழிப் பாதைகள் அராபியர்வசமாயின. மேலும், அவர்கள் விரைவிலே மத்தியதரைக்கடல், பாரசீக வளைகுடா என்பவற்றிலும் இந்து சமுத்திரத்திலும் ஆதிபத்தியம் பெற்றார்கள். அராபியரின் ஆதிபத்தியம் ஏற்பட்டதன் விளைவாகக் கடல்வழி வாணிபம் பெருவளர்ச்சியடைந்தது. அராபியக் கப்பல்களும் பாரசீகக் கப்பல்களும் கூடுதலான அளவிலே வாணிபத்தின்பொருட்டு இந்தியக் கரையோரங்களுக்குச் செல்லத் தொடங்கின. மிளகு, சுக்கு, இஞ்சி, மஞ்சள் முதலியனவும், பலவகைப் பருத்தியாடைகளும், சந்தனம், அகில் முதலிய வாசனைப் பொருள்களும், முத்து, இரத்தினம் போன்ற போகப் பொருள்களும் தென்னிந்தியத் துறைமுகப் பட்டினங்களிலிருந்து ஏற்றுமதியாகின. அராபியரின் வாணிப நடவடிக்கைகள் தென்னிந்திய வணிகருக்குச் சவாலாகவும் அதேவேளை அரியவாய்ப்பாகவும் அமைந்தன. அராபியரின் ஊடுருவல்களை மட்டுப்படுத்திக் கொள்வதற்கும் அவர்களால் ஏற்பட்ட வர்த்தகப் பெருக்கத்தின் வாய்ப்புக்களை நன்கு பயன்படுத்திக் கொள்வதற்கும் பல வணிகர் கூடிக் கூட்டாக இயங்குவது இன்றியமையாதவொரு தேவையாகியது. அத்தேவையின் அடிப்படையிலேயே அய்யாவொளே போன்ற வணிகர் கணங்கள் உருவாகியிருத்தல் வேண்டும்.

தக்கிணத்திலும் தமிழகத்திலும் ஏற்பட்ட உற்பத்திப் பொருட்களின் பெருக்கமும் பெருவணிகர் கணங்களின் வளர்ச்சிக்கு ஏதுவாயிருந்தது. கி. பி. ஏழாம் நூற்றாண்டளவிலே தீபகற்ப இந்தியாவிலே குறிப்பிடத்தக்க சமுதாய மாற்றங்கள் ஏற்படலாயின. காடுகள் அழிக்கப்பட்டுப் பரந்தளவிலே விளைநிலங்கள் உருவாக்கப்பட்டன. ஆற்றோரங்களிலும் மலைச்சாரல்களிலும் காட்டுப்பகுதிகளிலும் வாழ்ந்த மக்களிடையே பொருட்பரிவர்த்தனை கூடுதலான அளவில் ஏற்பட்டது. பிரம்மதேயங்கள், கோயில்கள், சமணப் பள்ளிகள் போன்ற அமைப்புக்களின் காரணமாகப் பொதுவான கலாச்சார அம்சங்கள் அவர்களிடையே ஏற்படலாயின. தொழில், மரவேலைப்பாடு, உலோகவேலைப்பாடு போன்ற பல கைத்தொழில்களில் முன்னேற்றம் ஏற்பட்டது. சனப்பெருக்கமும் நடமாட்டமும் உற்பத்திப் பெருக்கமும் வாணிபவளர்ச்சிக்குப் பெரிதும் பொறுப்பாகவிருந்தன. துறைமுகப் பட்டினங்களும் உள்ளூர்ப் பகுதிகளும் வழிப்பாதைகளினாலே நன்கிணைக்கப்பட்டன. வணிகர் பெருமளவிலே கூடுமிடங்களிற் பல நகரங்கள் வளர்ச்சியடைந்தன. வாதாபிச் சாளுக்கியரும் பின்பு இராஷ்டிரகூடரும் ஆதிக்கஞ் செலுத்திய காலப்பகுதியிலே தக்கிணத்தில் உருவாகியிருந்த அவர்களின் மேலாதிக்கமும் அதனால் ஏற்பட்ட அமைதியான சூழ்நிலையும் இவ்வளர்ச்சிகளுக்குச் சாதகமாயிருந்தன. கர்நாடகத்தை அடிப்படையாகக் கொண்டிருந்த அவர்களின் பேரரசிலுள்ள பகுதிகளெல்லாவற்றுள்ளும் கர்நாடகத்திலேயே வணிக கணங்கள் கூடுதலான வளர்ச்சி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. கல்யாணிச் சாளுக்கியரதும் சோழரதும் ஆதிக்கம் நிலைபெற்ற காலப்பகுதியில் வணிக கணங்களின் வளர்ச்சி தென்னிந்தியாவில் உன்னத நிலையினையடைந்தது.

துருக்கியர் மத்தியாசியப் பகுதிகளைக் கைப்பற்றியதன் விளைவாகப் பத்தாம் நூற்றாண்டளவில் சீனா, இந்தியா, மேற்காசியா ஆகியவற்றுக்கிடையிலான தரைவழியான வணிகப்பாதைகள் தடைப்பட்டன. அதனால் இந்துமாக்கடல்மூலமான கடல்வழி வாணிபம் அதிகரித்தது. நக்கவாரம், சாந்திமத்தீவு முதலிய கடல் நடுவிலுள்ள தீவுகளைக் கடற்படைகொண்டு கைப்பற்றியிருந்த சோழர்கள் இந்தியக் கரையோரங்களை அடுத்துள்ள கடல்வழிப் பாதைகளின்மூலம் நடைபெற்ற வாணிபத்திலே கவனஞ் செலுத்தினார்கள். சுங் வமிசத்தைச் சேர்ந்த சீனமன்னர்கள் சீனாவின் வெளிநாட்டு வர்த்தகத்தைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்கள். சீனாவின் துறைமுகங்களுக்கு அயல்நாட்டு வணிகரை வரவழைப்பதற்கெனச் சீனவரசாங்கம் பிறதேசங்களுக்குப் பல பிரசாரக் குழுக்களை அனுப்பியிருந்தது.[2] சீனவரசாங்கத்தின் கொள்கைகளும் இக்காலத்திற் கடல்வழி வாணிபம் வளர்ச்சியடைவதற்கு ஏதுவாயிருந்தன. சோழர்கள் பதினோராம் நூற்றாண்டிற் சீனாவுடன் ஏற்படுத்தியிருந்த தொடர்புகளுக்கு வாணிபமே மூலகாரணமாயிருந்தது எனக் கருதலாம். முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், முதலாம் குலோத்துங்கன் ஆகியோர் சீனப்பேரரசரிடம் தூதுக்குழுக்களை அனுப்பியிருந்தனர். அத்தகைய நல்லுறவுகளின் பயனாக பருத்தித் துணிவகைகள் வாசனைச் சரக்குவகைகள், போகப் பொருட்கள் என்பவற்றிலே சீனாவிற்கும் தென்னிந்தியாவிற்குமிடையில் பெருமளவிலான வாணிபம் நடைபெற்றது.[3] கடல்வழி வணிகப் பாதைகளின் பிரதான கேந்திர நிலையங்கள் தமிழகம், ஈழம் ஆகியவற்றின் கரையோரங்களில் அமைந்திருந்தமையால் வாணிபம் பெருகியது. இத்தகைய பின்னணியிலே நானாதேசித் திசையாயிரத்து ஐந்நூற்றுவர் போன்ற தென்னிந்திய வணிக கணங்கள் பெருமளவிலே கடல் வாணிபத்திற் பங்குகொண்டு இலங்கை, அருமணம், சுமாத்திரா, சீனா போன்ற கடல்கடந்த நாடுகளிலே வாணிப நடவடிக்கைகளை மேற்கொண்டன.[4]

தமிழகத்திலே காணப்பெற்ற வணிகர் கணங்களுள் **மணிக்கிராமம், நகரத்தார், நானாதேசிகள், வீரவளஞ்சியர், திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர்** என்பனவே பிரதானமானவை. இவற்றுள் பதினோராம் நூற்றாண்டுவரையான காலப்பகுதியில் **மணிக்கிராமம்** என்னும் கூட்டத்தவர் ஏனையோரைக் காட்டிலும் முதன்மை பெற்றிருந்தனர். மகோதைப் பட்டினம், உறையூர், கொடும்பாளூர், தலைக்காடு போன்ற தென்னகத்து நகரங்களில் அவர்களின் வாணிப நிலையங்கள் அமைந்திருந்தன.[5] இலங்கைக்கும் சீயம் நாட்டிற்கும் சென்று அவர்கள் வாணிபஞ் செய்திருந்தனர்.[6] பாண்டிய மன்னரின் சாசனங்கள் சிலவற்றிலே **நகரத்தார்** என்ற வணிக கணத்தவரின் நடவடிக்கைகள் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.[7]

பதினோராம் நூற்றாண்டிலே **திசையாயிரவர் ஐஞ்ஞூற்றுவர்** என்ற வணிகர் கணம் மிக முன்னேற்றமடைந்தது. அக்கூட்டமானது ஐஞ்ஞூற்றுவர், திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர், நானாதேசி திசையாயிரவர் ஐஞ்ஞூற்றுவர் எனப் பலவாறு தமிழ்ச் சாசனங்களிலும் கன்னடக் கல்வெட்டுக்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர் என்ற கணத்தின் அமைப்பானது தென்னிந்தியாவிலே கூட்டுறவு முறையி

லமைந்த வணிகர் கணங்களின் வளர்ச்சியிலுள்ள மிகவுயர்ந்த நிலையினைக் குறிப்பதாக அமைகின்றது. திசையாயிரவர் ஐஞ்ஞூற்றுவர் வேறு பல வணிகர் கூட்டங்களையும் தமது பேரமைப்பிலே சேர்த்திருந்தார்கள். அவர்கள் அரசரிடமிருந்து சில விருதுகளையுஞ் சிறப்புரிமைகளையும் பெற்றிருந்தார்கள். தென்னிந்திய வணிகர் கணங்களுள் ஐஞ்ஞூற்றுவர் மட்டுமே தங்கள் ஆவணங்களிலே 'மெய்க்கீர்த்தி' யினைச் சேர்த்துக்கொள்ளும் வழக்கத்தைப் பின்பற்றினார்கள்.

ஐஞ்ஞூற்றுவரின் மெய்க்கீர்த்தியானது, **'ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவநாஸ்ரய பஞ்சத வீரஸாஸன வக்ஷமீ லங்க்ருத வக்ஷஸ்தல'** என்ற சமஸ்கிருதச் சொற்களோடு தொடங்கும்.[8] இதில் அடங்கிய வர்ணனைகள் பொதுவாக மன்னர்களின் மெய்க்கீர்த்திகளில் வருவது கவனித்தற்குரியது. 'மூன்றுலகங்களுக்கும் புகலிடமான' எனப் பொருள்படும் **திரிபுவநாஸ்ரய** என்னும் மொழியானது சாளுக்கிய மன்னர்களின் வழமையான விருதுப் பெயர்களுள் ஒன்றாகும். சாளுக்கியரின் ஆட்சியில் ஐஞ்ஞூற்றுவர் கணம் உருவாகியமையால் அம்மன்னர்களின் விருதுப்பெயரை அவர்கள் பெற்றிருத்தல்வேண்டும். ஐஞ்ஞூறு வீரசாசனங்களைப் பெற்ற சிறப்பினையுடையவர் என்ற ஐதிகத்தின் காரணமாக ஐஞ்ஞூற்றுவர் என்ற கணப்பெயர் ஏற்பட்டிருத்தல் கூடும் என்பது சிந்தனைக்குரியதாகும். ஐஞ்ஞூற்றுவரின் மெய்க்கீர்த்தியானது அவர்களின் உற்பத்தி, சமுதாய உறவுகள், வாணிப நடவடிக்கைகள், அறச்செயல்கள், சீர்வரிசைகள் என்பவைபற்றிய விவரங்களைச் சுருக்கமாகவும் கவிரசனையுடனும் தொகுத்துக் கூறும் பான்மையுடையதாகும். வாசுதேவ(ன்), கண்டலி, மூலபத்திர(ர்) ஆகியோரின் வழியில் ஐஞ்ஞூற்றுவர் தோன்றினார்களென்றும் அவர்கள் அய்யப்பொழில்புர பரமேஸ்வரிக்கு மக்களரசியவர் என்றுஞ் சாசனங்கள் குறிப்பிடுகின்றன.[9] பரமேஸ்வரி அவர்களின் இஷ்டதெய்வமென்பதையும் ஐஞ்ஞூற்றுவர் கணம் அய்யப்பொழில்புரத்திலே உற்பத்தியானதென்பதையும் மட்டுமே இக்குறிப்புகள் உணர்த்தும்.

சில சாசனங்கள் ஐஞ்ஞூற்றுவரின் வாணிப நடவடிக்கைகளைப்பற்றிச் சுருக்கமாக எடுத்துரைக்கின்றன. பதினெட்டு வகையான தானியங்கள்,நெய், வெண்ணெய், உள்ளி முதலிய உணவுப் பொருட்கள், பட்டு வகைகள், பருத்தி ஆடைகள், படுக்கை விரிப்புக்கள், இஞ்சி, மஞ்சள், சுக்கு, மிளகு, கடுகு, சீரகம் போன்ற வாசனைச் சரக்குகள், கனி வருக்கங்கள், உப்பு, வெற்றிலை, பாக்கு, மலர்கள், மாலைகள், மருந்து வகைகள், பொன், வெள்ளி, இரும்பு முதலியவற்றினாலான உலோகப் பொருட்கள், கருவிகள், கொள்கலங்கள், யானை, குதிரை முதலிய உயிரினங்கள் போன்றவற்றை எல்லாம் அவர்கள் விற்பனை செய்ததாகச் சாசனங்கள் கூறும்.[10] தரைவழியாகவும் நீர்வழியாகவும் ஏழு கண்டங்களுக்கும் பதினெட்டுத் தேசங்களுக்குஞ் சென்று அவர்கள் வாணிபஞ் செய்ததாகச் சொல்லப்படுகின்றது.[11] கழுதை, ஒட்டகம், எருமை, மாடு முதலிய மிருகங்களிலே அவர்கள் பொதிகளை ஏற்றிச் சென்றார்கள். மேலும், அவர்கள் ஊர்களிலும் அங்காடிகளிலும் நகரங்களிலும் **தாவளம்** அமைத்து வாணிபஞ் செய்தனர். அவர்களைப்பற்றிச் சாசனங்களிற் காணப்படும் குறிப்புக்களை நோக்குமிடத்து ஐஞ்ஞூற்றுவர் தென்னிந்தியாவின் உள்நாட்டு வாணிபத்திலும் அயல்நாட்டு வாணிபத்

திலும் பெரும் பங்கினைப் பெற்றிருந்தனர் என்பது தெளிவாகின்றது. சுமாத்திராவிலுள்ள 1078 ஆம் ஆண்டு வரையப்பெற்ற, தமிழ்ச் சாசன மொன்று ஐஞ்ஞூற்றுவர் அங்குசென்று வாணிபஞ் செய்ததற்குச் சான்று யுள்ளது.[12] அருமண தேசத்திலே நானாதேசி வணிகர் சென்று தங்கியிருந்தனர். அதன் தலைநகரான அரிவட்டனபுரத்திலே ஒரு பெருமாள் கோயிலை அமைத்து அதற்கு நானாதேசி விண்ணகர் எனப் பெயரிட்டிருந்தார்கள். மலை மண்டலத்து மகோதைப் பட்டினத்து ஈராயிரன் சிறியனான குலசேகரநம்பி என்பவன் அக்கோயிலில் மண்டபமொன்றினை அமைத்து அதிலே 'நின்றெரிகை'க்கு நிலைவிளக்கு ஒன்றினையிட்டான்.[13]

கர்நாடகத்திலும் தமிழகத்திலும் ஏற்பட்ட வாணிப வளர்ச்சியாலும் வணிக கணங்கள் பெற்ற செல்வாக்கினாலும் சமுதாய உறவுகளிலே குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. நிலக்கிழார்கள் சமுதாயத்திலே பெற்றிருந்த ஆதிக்கம் வணிக கணங்களின் வளர்ச்சியின் விளைவாகச் சிறிது தளர்வுற்றதென்று சிந்திக்கலாம். வணிகர் கணங்கள் கைத்தொழில் உற்பத்தியில் ஈடுபட்டிருந்த பல சமூகப்பிரிவுகளுடன் நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்தியதன் பயனாக அவற்றின்மீது செல்வாக்கும் ஆதிக்கமும் பெற முடிந்தது. கன்னடச் சாசனங்கள் சில அய்யாவொளே வணிகருடன் தொடர்பு கொண்டிருந்த மேல்வரும் சமுதாயப் பிரிவுகளைக் குறிப்பிடுகின்றன.

> கவறை, கத்திரிகர், செட்டி, செட்டிகுத்தர், செட்டிபுத்திரர், நாடு, நகரம், நானாதேசிகள், வளஞ்சியர், வீரவணிகர், ஸ்வதேசி, பரதேசி, கண்டலி, வத்ரக, காமுண்டஸ்வாமி, ஆவணக்காரர், ஏறிவீரர், முனைவீரர், கொங்கவாளர், மும்முறிதண்டங்கள், அங்கக்காரர், வீரக்கொடி, வியவகாரிகர், பாஞ்சாலர், கும்பலிகர், தண்டுவாயி, வஸ்திரபேதகர், திலகடகர், குரந்தகர், வஸ்திரராக்ஷஸர், தேவாங்கர்......[14]

இச்சமூகப் பிரிவுகள் யாவும் வணிகர், போர்வீரர், தொழில் வினைஞர் என்னும் மூன்று தொகுதிகளைச் சேர்ந்தவையென்பது குறிப்பிடத்தக்கது. அய்யாவொளே வணிகர் பிறபல வணிகர் கூட்டத்தவரையும் தம்மோடு இணைத்துக்கொண்டதோடு பஞ்சகம்மாளர், நெசவாளர் முதலிய உற்பத்தியாளருடனும் தொடர்பு கொண்டிருந்தனர். பிரபலமான வணிகர் கணங்கள் பொருட்களை உற்பத்தியாளரிடமிருந்து சேர்த்துக் கொள்வதற்கு மட்டுமன்றி உற்பத்தி நிலையங்களை நிறுவியும் ஆதரித்தும் வந்தன என்றும் கருதலாம். இத்தகைய நடவடிக்கைகளின் விளைவாகவே நானாதேசி, நகரம், வளஞ்சியர் போன்ற வணிகர் மத்தியகாலத் தமிழகத்து வலங்கை, இடங்கை என்னுமிரு தொகுதிகளைச் சேர்ந்த சமுதாயப் பிரிவுகள் பலவற்றின் தலைவராயினர் எனக் கருதலாம்.

பட்டினங்களின் வளர்ச்சியிலும் நிர்வாக அமைப்பிலும் வணிக கணங்கள் கொண்டிருந்த பங்கு குறிப்பிடத்தக்கதொன்றாகும். பெருவணிகர் கணங்களோடு பல சமூகப் பிரிவுகள் இணைந்திருந்தமையால் அவற்றின் செல்வாக்கு மேலோங்கிய பகுதிகள் சில தடவைகளிலே பட்டினங்களாகப்

பிரகடனப்படுத்தப்பட்டன. மணிக்கிராமப் பட்டினம், நானாதேசிதசமடிப் பட்டினம், ஏறிவீர பட்டினம் போன்ற வணிகர் நகரங்கள் சிலவற்றைத் தென்னிந்திய சாசனங்கள் குறிப்பிடுகின்றன. அத்தகைய பட்டினங்கள் சுயாட்சியுரிமை பெற்ற நிர்வாகப் பிரிவுகளாகவும் சமுதாயவமைப்புக்களாகவும் விளங்கின. சில தடவைகளிலே பட்டணஸ்சுவாமி என்ற பட்டத்தையுடைய அதிகாரி அவற்றின் நிர்வாகத்திற்கும் பொறுப்பாக இருந்தான்.[15] பாதுகாவல், வரி சேர்த்தல், சமுதாய வழமைகளை நிலைநாட்டுதல், தகராறுகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்குதல், பொதுநலப் பணிகளை மேற்கொள்ளுதல், அறநிலையங்கள், கோயில்கள், அறக்கட்டளைகள் என்பவற்றைப் பொறுப்பேற்று நடாத்துதல் போன்ற பொறுப்புக்களை வணிக கணங்களின் கட்டுப்பாட்டிலுள்ள பட்டினங்கள் மேற்கொண்டிருந்தன. சபை, ஊர் போன்ற அமைப்புக்களிற்போல பொதுவிடயங்களைக் குறித்துத் தீர்மானங்களையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காக வணிக கணத்தவர் அனைவரும் 'நிறைவரக் கூடி'க் கூட்டாகச் செயற்படுவது வழக்கமாயிருந்தது. சில சந்தர்ப்பங்களில் வணிக கணங்கள் பிரதிநிதித்துவ அடிப்படையிற் கூடிக் குறிப்பிட்ட சில பணிகளை நிறைவேற்றுவதற்கு வாரியங்களை அமைத்தனர்.

அரசரின் அனுமதியோடும் ஆதரவோடும் அமைக்கப்பெற்ற வணிகர் நகரங்கள் தமது அதிகாரம், சிறப்புரிமைகள், சீர்வரிசைகள் என்பன குறித்துப் பட்டயங்களைப் பெற்றிருந்தன. வீரராகவன் என்ற சேர மன்னன் மணிக்கிராமத்து லோகப்பெருஞ் செட்டிக்குக் கொடுத்த பட்டயம் தக்கவோர் உதாரணமாகும். அதன் வாசகம் மேல்வருமாறுள்ளது:

மகோதைப் பட்டினத்து இரவிக்கொற்றனாய சேரமான் லோகப் பெருஞ்செட்டிக்கு மணிக்கிராமப் பட்டிவங் குடுத்தோம். விளாவாடையும் பவளத்தாங்கும் பெறுபேறும் கடத்து வளஞ்சியமும் வளஞ்சியத்தில் தனிச்செட்டும் முற்சொல்லும் முன்னடையும் பஞ்சவாத்தியமும் சங்கும் பகல்விளக்கும் பாவாடையும் ஐந்தோளமும் கொற்றக்குடையும் வடுகுப் பறையும் இருபடிதோறணமும் நாலுசேரிக்கும் தனிச்செட்டும் குடுத்தோம். வாணியரும் ஐங்கம்மாளரும் அடிமை குடுத்தோம். நகரத்துக்குக் கர்த்தாவாய இரவிக் கொத்தனுக்கு பற கொண்டு அளந்து நிற கொண்டு சக்கரையோடு கஸ்தூரியோடு விளக்கெண்ணெயோடு இடயில் உள்ளட எப்பேர்ப்பட்டதிலும் தரகும் அதின் அடுத்து சுங்கமும் கூட கொடுங்கூலூர் அளவியில் நீர் முதலாய செப்பேடு எழுதிக் குடுத்தோம் சேரமான் லோகப் பெருஞ் செட்டியான இரவிக் கொற்றனுக்கு. இவன் மக்கள் மக்களுக்கே வழிவழியே பேராகக் குடுத்தோம். இடறியும் பன்றியூர் கிராமமும் சோகிறக் கிராமமும் அறியக் குடுத்தோம். வேணாடும் ஓடுநாடும் அறியக் குடுத்தோம். ஏராநாடும் வள்ளுவநாடும் அறியக் குடுத்தோம்.[16]

இச்செப்பேட்டின் வாயிலாக மணிக்கிராமப் பட்டினம் என்ற நகரமொன்று உருவாகியிருந்ததென்பதையும் அதன்மீதான அதிகாரம் மகோதைப் பட்டினத்தைச் சேர்ந்த இரவிக் கொற்றனிடம் அரசனால் அளிக்கப்பட்டது என்பதையும் அறிய முடிகின்றது. இரவிக் கொற்றன் சேர

மான் லோகப் பெருஞ் செட்டி என்ற சிறப்புப் பெயரைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. அவனுக்குக் கிடைத்த ஆட்சியதிகாரம், சீர்வரிசைகள், சிறப்புரிமைகள் என்பவற்றைச் செப்பேடு குறிப்பிடுகின்றது. குறுநில மன்னரான சாமந்தருக்குரிய அதிகாரங்களையும் சீர்வரிசைகளையும் அவன் பெற்றிருந்தமை கவனித்தற்குரியதாகும். இரவிக்கொற்றன் மணிக்கிராமப் பட்டினத்தின் தலைமையதிகாரியாக, கர்த்தாவாக, அரசனாலே நியமிக்கப் பெற்றிருந்தான். மணிக்கிராமப் பட்டினத்தின் தலைமைப் பதவியும் அதற்குரிய சிறப்புரிமைகளும் இரவிக்கொற்றனுக்கும் அவனுடைய வழிமுறைச் சந்ததியாருக்கும் பரம்பரையுரிமையாகக் கொடுக்கப்பட்டன.

பட்டினத்து அதிகாரியென்ற வகையில் இரவிக்கொற்றன் அங்கு வாழ்ந்த வணிகர், பஞ்சகம்மாளர் ஆகியோர்மீது எஜமானமும் ஆதிக்கவுரிமையும் பெற்றான். வெண்கொற்றக்குடை, பஞ்சவாத்தியம், முத்துப் பல்லக்கு, சங்கு, நிலப்பாவாடை முதலியன பதவிக்குரிய சிறப்புரிமைகளாக அவனுக்குக் கொடுபட்டன. மேலும், வாணிபத்திலே சில சிறப்புரிமைகளும் ஏற்றுமதி வாணிபத்தில் ஏகபோக உரிமையும் அவனுக்குக் கிடைத்தன. எவ்வகைத்தான பொருட்களையும் விற்பனை செய்யும்பொழுதும் கடவுகளிலே கடத்திச் செல்லும்பொழுதும் அரசிறையாகக் கொடுக்கப்பட வேண்டிய தரகு என்னும் ஆயத்தையும் சுங்கவரிகளையும் தானே சேர்த்துக் கொள்வதற்கான அதிகாரத்தையும் அவன் பெற்றான். அய்யாவொளே ஐஞ்ஞூற்றுவர் அமைத்த பட்டினங்களின் நிர்வாகமுறை மணிக்கிராமப் பட்டினத்து நிர்வாக முறையிலிருந்து சிறிது வேறுபட்டதாகும். அய்யாவொளே அமைத்த அய்யப்பொழில் நகரங்களின் நிர்வாகம் தனியொருவரின் பொறுப்பாகவன்றி குழு அடிப்படையில் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கர்நாடகத்தில் வீரவளஞ்சியர் அமைத்திருந்த நகரங்கள் **வணஞ்சு வட்டணம்** என்றழைக்கப்பட்டன.[17] கல்யாணிச் சாளுக்கிய மன்னன் இரண்டாம் ஜெயசிங்கனுடைய ஹூல்கூர் கல்வெட்டு (1038) அய்யாவொளே கணத்தைச் சேர்ந்த வீரவளஞ்சியர் வசமாயிருந்த **வணஞ்சு வட்டணம்** பற்றிக் குறிப்பிடுகின்றது.[18] கன்ஹர(ன்) காலத்து (1250) மந்தாபுரக் கல்வெட்டிலும் **வணஞ்சுவட்டணம்** ஒன்றைப்பற்றிய குறிப்பு வருகின்றது.[19]

அய்யாவொளே கணத்தவர் அமைத்த நகரங்களிற் சில **ஏறிவீர பட்டினம்** என்று குறிப்பிடப்பட்டன. இராசாதிராசனின் 32 ஆம் ஆண்டில் (1053) எழுதப்பட்ட சாசனமொன்றிலே அய்யாவொளே வணிகர் **ஏறிவீர பட்டினம்** ஒன்றை அமைத்தமைபற்றிக் கூறப்பட்டுள்ளது.[20] நானாதேசிகளும் அவர்களைச் சேர்ந்த பிற வணிகர் பலருமாகக் கூடி சீராவள்ளி என்னுமூரின் பழம்பெயரை மாற்றி அதனை நகரமாக்கி அதற்கு **நானாதேசிய தசமடி ஏறிவீர பட்டினம்** எனப் பெயரிட்டார்கள். அப்பட்டினத்தவர்க்குச சில சிறப்புரிமைகளையும் அவர்கள் வழங்கினார்கள்.[20] அதற்கு அண்மையில் முத்துகூரு என்னுமிடத்திலும் வீரபட்டினமொன்று அமைந்திருந்தது[21] காட்டூர் என்பது ஒரு காலப்பகுதியில் அய்யம்பொழில் பட்டினமாயிருந்தது. நானாதேசி திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர் மயிலாபுரியிற் கூடி அதன் பழம் பெயரினை மாற்றிக் காட்டூருக்கு ஏறிவீர பட்டி

னம் என்று பெயரிட்டார்கள்.[22] இத்தகைய வணிகர் பட்டினங்கள் இலங்கையிலும் அமைந்திருந்தன.

## ஈழத்திலே தமிழ் வணிக கணங்கள்

இலங்கையிலே கி. பி. 900–1250 ஆகிய காலப்பகுதியைச் சேர்ந்த 22 சாசனங்களிலே தமிழ் வணிகரைப்பற்றிய குறிப்புக்கள் உள்ளன. இவற்றுள் மூன்று சிங்கள மொழியிலுள்ளன.[23] ஏனையவை யாவும் தமிழ்ச் சாசனங்களாகும். இச்சாசனங்கள் அநுராதபுரம், பொலநறுவை, பதவியா, வகால்கட, விகாரேகின்ன, வதுளை, தெகியமுல்ல, கல்தென்பிட்டிய, மனல் கேணி முதலிய இடங்களிற் கண்டெடுக்கப்பட்டுள்ளன.[24] இவற்றுட் சில சிறியனவாயுள்ளன, வேறுசில மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ளன. ஒரு சில சாசனங்கள் மட்டுமே நீளமானவையாகவும் பழுதடையாதனவுமாயுள்ளன. எனவே இச்சாசனங்களிலுள்ள சான்றுகளின் துணைகொண்டு ஈழத் தமிழ் வணிகர் கணங்களின் வரலாற்றிலுள்ள சில பிரதானமான அம்சங்களைமட்டுமே அறிந்துகொள்ளமுடிகின்றது. எனினும் அண்மைக் காலத்திலே இலங்கைத் தமிழ்ச் சாசனவியலில் ஏற்பட்ட பெருமுன்னேற்றத்தின் பயனாகவே ஓரளவிற்கேனும் விரிவாக ஈழத்து வணிக சங்கங்களைப்பற்றி ஆராய்ந்துகொள்ள முடிகிறதென்பது குறிப்பிடத்தக்கது. மணிக்கிராமம் என்ற வணிகர் கணம் பத்தாம் நூற்றூண்டிலே இலங்கையில் இருந்தமைக்கு நான்காவது கஸபனுடைய வதுளைத் தூண் கல்வெட்டு சான்றளிக்கின்றது.[25] ஹொப்பிட்டிகம என்னுமிடத்திலே மணிக்கிராம கணத்தவர் நிலையாகவிருந்து வாணிபஞ் செய்தனர் என்பதை இச்சாசனத்தின் மூலம் அறிய முடிகின்றது.[26] அவர்கள் முன்னைய அரசனொருவனிடமிருந்து பெற்ற சிறப்புரிமைகளை அரசாங்க அதிகாரிகள் மீறியமையால் ஊரவரோடு சேர்ந்து அரசினிடம் முறையிட்டுத் தமது குறைகளுக்குப் பரிகாரந் தேடினார்கள். இலங்கையின் உள்ளூர்ப் பகுதியான ஹொப்பிட்டிகமவில் மணிக்கிராமத்தவர் வாணிப நிலையமொன்றினை அமைத்திருந்தமையால் அவர்கள் இலங்கையின் உள்நாட்டு வாணிபத்திற் பங்கு கொண்டிருந்தனர் என்பது தெளிவாகின்றது.

நான்குநாட்டார் என்ற பிறிதொரு வணிகர் கணமும் பத்தாம் நூற்றூண்டில் இலங்கை வாணிபத்திற் பங்குகொண்டிருந்தது. சேனவர்மன் என்ற மன்னனொருவனின் ஆட்சிக் காலத்தில் நான்குநாட்டார் அநுராதபுரநகரின் பௌத்தப் பள்ளியொன்றை அமைத்து அதற்கு மாக்கோதைப் பள்ளியென்று பெயரிட்டார்கள்.[27] ‘நான்குநாட்டுத் தமிழர்’ என்று அவர்களைச் சாசனங் குறிப்பிடுகின்றது. அநுராதபுரத்தில் நிலைகொண்டிருந்த நான்குநாட்டார் பௌத்தப் பள்ளியொன்றினை மாக்கோதைப் பள்ளியென்று பெயர் சூட்டியதால் அவர்கள் மலையாளநாட்டு மாக்கோதைப் பட்டணத்திலிருந்து இலங்கைக்குச் சென்றிருந்தனரென்று கொள்ளலாம். கன்னட சாசனங்கள் இவ்வணிகர் கணத்தை நால்குநாடு என்று குறிப்பிடுகின்றன. அய்யாவொளே என்னும் பேரமைப்பில் நான்குநாடும் சிலவிடங்களிலே சேர்ந்திருந்தது. பத்தாம் நூற்றூண்டிற்கும் பிற்பட்ட காலத்து ஈழத்துச் சாசனங்களில் நான்குநாட்டார்பற்றிய குறிப்பெதுவுங் கிடைக்கவில்லை.

**அய்யாவொளே** வணிகர் சோழராட்சி ஏற்பட்டிருந்த காலத்தில் இலங்கையிலிருந்தமைக்குச் சில உறுதியான சான்றுகள் கிடைக்கின்றன. பதவியாவிலும், பொலநறுவையிலும் காணப்பெற்ற சோழர் காலத்துக்குரிய தமிழ்க் கல்வெட்டுக்களிலே தமிழ் வணிகரைப்பற்றிய குறிப்புக்கள் உள்ளன. பதவியாவிலுள்ள 'முதலாம் சிவாலயம்' இராசராசனது ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட இரவிகுலமாணிக்க ஈஸ்வரமாகும். அதன் அத்திவாரக் கற்களிலே 'அழகன் வத்தமனுன தேசி...... ய்யாயத்துணைச் செட்டி இட்டது', இக்கல்லு (பறியில்) வணிகர் தனி (அப்பன் இட்டது) என்ற தொடர்கள் காணப்படுகின்றன.[28] நானுதேசி வணிகர் கணத்தைச் சேர்ந்தவர்களும் அக்கோயிலை நிர்மாணிப்பதிலே பங்குகொண்டிருந்தனர் என்பது சாசனக் குறிப்பிலே தெளிவாகின்றது. பதவியாச் சிவதேவாலயத்தின் அழிபாடுகளிடையே காணப்பட்ட இராசாதிராசனின் கல்வெட்டில், (நானுதே) சியன் கொன்ணுவில் வெண்காடன் எறிமணியொன்றை இரவிகுலமாணிக்க ஈஸ்வரத்திற்கு நன்கொடையாகக் கொடுத்தான் என்று கூறப்பட்டுள்ளது. இச்சாசனத்தைப்பற்றி கா. இந்திரபாலா மேல்வருமாறு கூறுகின்றமையும் கவனிக்கத் தக்கதாகும்.

> ''இரவிகுலமாணிக்க ஈஸ்வரம் எனப் பெயரிய கோயிலுக்குச் சோழரின் ஆட்சியலுவலரும் போர்வீரரும் வணிகருமாயிருந்திருக்கக்கூடியவர்கள் வழங்கிய நன்கொடைகளை இச்சாசனம் பதிவு செய்கின்றது. நானுதேசியன் என்பது நன்கறிமுகமான நானுதேசி வணிகர் கணத்தைச் சேர்ந்த ஒருவனைக் குறிக்கின்றது. எனவே நன்கொடையாளரென இவ்வாவணத்திற் குறிப்பிடப்பட்டவர்கள் பிரதானமாகச் சோழராட்சி அலுவலராயும் படைவீரராகவும் வணிகராயுமிருந்தனர் என்று முடிவு கொள்வது தவருகாது.[29]

சோழராட்சியில் நானுதேசி வணிகர் பதவியாவிலிருந்தமைக்குச் சான்றுள்ளதால் நானுதேசிகளால் அந்நகரிலே அமைக்கப்பட்ட வாணிப நிலையங்களும் குடியிருப்புக்களும் உருவாகுவதற்கு அத்திவாரமாயமைந்தன என்று கொள்வது பொருத்தமானதாகும். சோழராட்சிக் காலத்திற்குரியதென்று கொள்ளத்தக்க வரிவடிவங்களில் அமைந்த ஈரடித் தமிழ்ச் சாசனமொன்று திசை **ஆயிரவர் ஐஞ்ஞூற்றுவர்** என்ற வணிக கணத்தைக் குறிப்பிடுகின்றது. அச்சாசனத்தின் வாசகம் மேல்வருமாறுள்ளது.

> ஸ்வஸ்தி ஸ்ரீ வஹி சிந்தயில் டு வாளாப்பள்ளி(யிற்)
> பதிநெண் பூமித் தேசித் திசை ஆயிரவர் ஐஞ்ஞூற்றுவர் .....[30]

பதினேராம் நூற்ருண்டின் முதற்பகுதியிற் பொலநறுவையிலே திசையாயிரவர் ஐஞ்ஞூற்றுவர் வசித்தமைக்கு இச்சாசனஞ் சான்ருகலாம். சோழராட்சிக் காலத்தில் நகர்ப்புறங்களிலே தங்கியிருந்த தமிழ் வணிகர் கணங்கள் சிங்கள மன்னர்களின் ஆட்சிக் காலத்திற் பெருவளர்ச்சியடைந்தன. அய்யாவொளே வணிகர் கணமானது இலங்கையின் பிரதான நகரங்களிலும் வடமத்திய பகுதியிலுள்ள பிற பலவிடங்களிலும் வர்த்தக நிலையங்களை அமைத்து வாணிப நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தமையினைப் பதினேராம், பன்னிரண்டாம் நூற்ருண்டுகளுக்குரிய சாசனங்கள் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. வகால்கட, பதவியா, விகாரேகின்ன

தெகியமுல்லே, கல்தென்பிட்டிய என்னுமிடங்களில் அவர்களமைத்திருந்த சாசனங்களின் தொடக்கத்தில் அவர்களின் மெய்க்கீர்த்தி சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர் கணத்தின் அமைப்பினை அறிந்துகொள்வதற்கு அவர்களின் சாசனங்களிலுள்ள மெய்க்கீர்த்தியினை இங்கு கவனிப்பது அவசியமாகின்றது. வகால்கட சாசனத்திலுள்ள மெய்க்கீர்த்தி மேல்வருமாறு அமைந்துள்ளது.

> ''ஸ்ரீ ஸமஸ்த புவனஸ்ரய பஞ்சதை வீர ஸாஸன லக்ஷ்மீ லங்க்ருத வக்ஷஸ்தல புவன பராக்ரம வாஸுதேவ கண்டலி மூலவத்ரோத்வவ ஸ்ரீ அய்யப்பொழில்புர பரமேஸ்வரிக்கு மக்களாகிய வெய்ய சுடர் நடுவேல் வீர வளஞ்செயர் மதிதோய் நெடுங்கொடி மாடவீதிப் பதினெட்டுப்
> பட்டினமும் முப்பத்திரண்டு வேளர்புரமும் அறுபத்து நான்கு கடிகைதாவளமும் தாவளத்திருந்துதறம் வளர்க்கின்ற செட்டியும் செட்டி புத்திரனும்
> கவறை கா(ஸ்ய)பனும் காமுண்டஸ்வாமியும் அங்கக்காறனும் ஆவணக்காறனும்
> ......கொங்கவாளரும் வலங்கை......எம்பட்டினம் முந்நூறும் பகை பணிய அறம் வளர கலிமெலிய செங்கோலே முந்நாக சமைதன்மை இனிது
> நடாத்துகின்ற பதினெண்பூமித் தேசித் திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர்.[31]

கர்நாடகத்திலும் தமிழகத்திலுங் கிடைக்கின்ற திசையாயிரவர் ஐஞ்ஞூற்றுவரின் மெய்க்கீர்த்திகளின் சாராம்சங்கள் இலங்கையிலுள்ள சாசனங்களில் அடங்கியிருத்தல் குறிப்பிடத்தக்கது. அறுபத்துநான்கு கடிகைத் தாவளம் என்பவற்றைச் சாசனங்களிலே குறிப்பிடுவது தென்னிந்திய வணிகரிடையே மரபாகிவிட்டது. தம் மூதாதைகளின் வழமையைப் பின்பற்றியே இலங்கையிலிருந்த ஐஞ்ஞூற்றுவர் இவ்வமைப்புக்களைப் பற்றிய வர்ணனைகளைத் தங்கள் சாசனங்களிலே சேர்த்திருத்தல் வேண்டும். அவர்களின் சிறப்பினை வலியுறுத்துவதற்கு அவ்வர்ணனைகள் பயன்பட்டன.

ஈழத்து ஐஞ்ஞூற்றுவர் கணமானது வீரவளஞ்சியர், நானாதேசிகள், செட்டிகள், செட்டிபுத்திரர், கவறையர், காமுண்டஸ்வாமி, ஆவணக்காரர், வீரக்கொடி முதலான பல பிற வணிகர் குழாங்களையுந் தன்னோடு இணைத்துக் கொண்ட பேரமைப்பாய் விளங்கியது. பதவியா, வகால்கட, விகாரேகின்ன ஆகிய மூன்றிடங்களிலுமுள்ள சாசனங்களிலும் இப்பிரிவுகளிற் பல குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே திசையாயிரவர் ஐஞ்ஞூற்றுவர் கணமானது ஈழத்திலிருந்த தமிழ் வணிக கணங்களுள் மிகப் பெரியதாகவும் அதிக செல்வாக்கு வாய்ந்ததாகவும் விளங்கியதோடு அவர்களுக்கெல்லாம் தலைமை தாங்கியதென்றுங் கருதலாம். திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர் பொலநறுவைக்கால சமுதாயத்திலே செல்வமும் செல்வாக்கும் பெற்ற கூட்டமாக விளங்கினார்கள். அவர்கள் தென்னிந்தியாவிற்போல இலங்கையிலும் சில சிறப்புரிமைகள் பெற்றிருந்தார்கள். பீடம் ஏருமாய் வந்ததாக என்னும் சொற்கள் அவர்களின் சாசனங்களில் வருவதும்

கவனித்தற்குரியதாகும். 'பதினெண் பூமி எறிந்தாரை இங்ஙனம் சாத்திக் குலத்துப் பெயரிட்டுச் சிறப்புச் செய்தமையிலாங்கு, நமக்குப் பொதுமக்களும் சிறப்புச் செய்ய வேண்டும்' என்று சாசனமொன்றில் வருந் தொடர்கள் தமிழ் வணிகர் கணங்கள் மக்களாலே சிறப்பிக்கப்பட்டமைக்குச் சான்ருகலாம். **வளஞ்சியர்** என்ற வணிகர் கணத்தைப்பற்றி ஈழத்திலுள்ள நான்கு கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. **வெய்ய சுடர் (ஒ) நடு வேல் வீரவளஞ்சியர்** என்ற சொற்ருெடர்கள் வகால்கட, விகாரேகின்ன, தெகிய முல்ல ஆகியவிடங்களிலுள்ள ஐஞ்ஞாற்றுவரின் சாசனங்களிலே காணப்படுகின்றன. பொலநறுவையிலும் பன்னிரண்டாம் நூற்ருண்டின் முதற் பகுதியிலே வீரவளஞ்சியர் வசித்தனர். இலங்கைக்கும் தமிழகத்திற்கும் இடையிலுள்ள வாணிபத்திலே வளஞ்சியரும் பங்கு கொண்டிருந்தார்கள். வளஞ்சியர் நெடுங்காலமாகவே இலங்கையிலிருந்தமையாலே அவர்களை இலங்கையரென்றே தமிழகத்திற் கருதினர்கள். அதனுலும் அங்குள்ள வளஞ்சியரிலிருந்து வேறுபடுத்துவதற்குமாக அவர்களைத் **தென்னிலங்கை வளஞ்சியர்** என்று வர்ணித்தார்கள்.

தமிழகத்திலுள்ள இரு சாசனங்கள் தென்னிலங்கை வளஞ்சியர்பற்றிக் கூறுகின்றன. அவற்றுளொன்று தஞ்சாவூர் மாவட்டத்து நன்னிலம் தாலுகாவிலுள்ளது.[32] மற்றையது இராமநாதபுர மாவட்டத்துத் தித்தாண்டபுரம் என்னுமிடத்திலுள்ளது. சடையவர்மன் வீரபாண்டியனுடைய காலத்துக்குரிய அச்சாசனத்திலே இவ்வூரில் இருக்கிற அஞ்சு வண்ணம் மணிக்கிராமத்தோமும் ஆரியரில் சாமந்த பண்டசாலையும் ........பட்டாரியரும் தோயாவாத்திரச் செட்டுகளும் தென்னிலங்கை வளஞ்சியரும் கைக்கோளரும் தூசுவரும் வாணிபரும் நீண்ட கரையாரும் கோயில் திருமுன்பிலே நிறைவரக் கூடி இருந்து என்ற சொற்ருெடர்கள் வருகின்றன.[33]

சர்வதீர்த்தமுடைய நாயஞர் கோயிலில் ஆவுடைய நாயஞர் எழுந்தருளியிருந்த மண்டபமானது பழுதடைந்தமையால் அதனைப் புனரமைப்பதற்கு வேண்டிய முதலைச் சேர்க்கும் நோக்குடன் இரணிய முத்தநாட்டுச் சிறுதூருடையாஞன பெருமாள் இராசராசதேவ தென்னவதரையன் திருக்காமக்கோட்டமுடைய பெரிய நாச்சியார் மண்டபத்திலே கூடுமாறு வணிகர் கூட்டத்தவர் பலரையும் பிறரையும் அழைத்திருந்தான். எனவே மணிக்கிராமத்தார், **தென்னிலங்கை வளஞ்சியர்** முதலானேர் கூடி தங்கள் வருமானத்தினிலொரு பகுதியைக் கோயிற்றிருப்பணிக்குக் கொடுப்பதென்று தீர்மானம் நிறைவேற்றினர்கள்.[34] இத்தகைய நடவடிக்கைகளிற் பங்கு கொண்ட தென்னிலங்கை வளஞ்சியர் தென்பாண்டி நாட்டிலே நிலையாக விருந்து வாணிபஞ் செய்திருத்தல் வேண்டும். **வளஞ்சியர்** என்பது கன்னடத்திலே **வணஞ்ஜிய** என்ற வடிவில் வந்துள்ளது. தமிழ் வழக்கில் **வளஞ்சியம்** என்பது வாணிபத்தைக் குறித்தது என்பது கடத்து **வளஞ்சியம்** எனச் சாசனத்தில் வருஞ் சொற்ருெடரினல் உறுதியாகின்றது. தென்னிந்திய சமுதாயத்தில் வளஞ்சியர் காலப்போக்கிலே தனியானவொரு சமூகப் பிரிவானர்கள்.

நானதேசி என்னுங் கணத்தவர்பற்றி இலங்கையிலுள்ள ஏழு சாசனங்களிலே குறிப்பிடப்பட்டுள்ளது. நானதேசி வணிகர் முன்குறிப்பிடப்

பட்டவாறு இலங்கையிற் சோழராட்சிக் காலத்திற் பதவியாவிலே தங்கியிருந்தனர். கொண்ணாவில் வெண்காடன் என்ற நானாதேசியனைப்பற்றிப் பதவியாவிலுள்ள இராசராசனின் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. லீலாவதி என்னுமரசி பொலநறுவையில் ஆட்சிபுரிந்த காலத்தில் அனுராதபுரத்தில் நானாதேசி வியாபாரிகளிருந்தனர். அந்நகரில் அமைக்கப்பட்டிருந்த பல வ(ல்)லவி மேதாவி என்ற தானசாலைக்குத் தேவையான வாசனைச் சரக்கு வகைகளை நானாதேசி வியாபாரிகள் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை லீலாவதி செய்திருந்தாள்.[35]

பதவியா, வகால்கட, விகாரேகின்ன, தெகியமுல்ல ஆகியவிடங்களிலுள்ள சாசனங்கள் நானாதேசி வணிகரைப்பற்றிக் குறிப்பிடுகின்றன. வகால்கட கல்வெட்டிலும் பதவியாவிலுள்ள கல்வெட்டுக்களிலும் நானாதேசி வணிகர் பலரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. நானாதேசி கணத்தைச் சேர்ந்தவர்கள் இச்சாசனங்களிலே தேசி என்று குறிப்பிடப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது, தேசி மன்னடை அழகிய மணவாளரான மூன்று தரமலைக்கலங்காத கண்டநாட்டுச் செட்டியார், தேசி வீடுவிடங்கனான அடைக்கல நாட்டுச் செட்டியார், செங்கண்மாலாரான தேசி பிஞ்ஞகன், தலைத்தலானின்ற தேசி பட்டவர்த்தனம் முதலிய நானாதேசியர்பற்றி வகால்கடக் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது.[36]

நானாதேசிகளைப்பற்றி இலங்கைச் சாசனங்களிலுள்ள சில குறிப்புக்கள் அவர்களுக்கும் திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவருக்கும் இடையிலான தொடர்புகளைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கு உதவுகின்றன. தமிழ்ச் சாசனங்களைப் பொறுத்தவரையில் நானாதேசியரைப்பற்றிய செய்திகள் யாவும் திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவரின் கல்வெட்டுகளில்மட்டுமே இதுவரை கிடைத்துள்ளன. விகாரேகின்னக் கல்வெட்டு ஐஞ்ஞூற்றுவரை நானாதேசித் திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர் என வர்ணிக்கின்றது. பதினெண் பூமித் தேசித் திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர் என்ற சொற்றொடர்கள் வகால்கட, பதவியா ஆகியவிடங்களிலுள்ள கல்வெட்டுக்களிலும் வருகின்றன. நானாதேசித் திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர் என்பது தனியொரு வணிகர் கணத்தின் பெயராக வருகின்றதனால் நானாதேசியரே திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர் என்றழைக்கப்பட்டார்களா என்ற சிந்தனை எழுகின்றது.

நானாதேசி, அய்யாவொளே ஐஞ்ஞூற்றுவர் என்போர் இரு வேறான வணிகர் கணங்களாயிருந்தமைக்குச் சான்றுகளுள்ளன. மந்தாபுரக் கல்வெட்டில் ஸ்ரீமத் அய்யாவொளேய அய்நூர்வர் ஸ்வாமிகளும்...... மும்முறிதண்டங்களும் உபய நானாதேசிகளும்... எனவுள்ள பகுதி இதற்குத் தக்கவோர் உதாரணமாகின்றது.[37] ஒரே சாசனத்தில் ஐஞ்ஞூற்றுவரும் நானாதேசிகளும் இரு வேறான கணங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். எனவே நானாதேசியரே ஐஞ்ஞூற்றுவராயிருந்தனர் என்று கருதுவதற்கிடமில்லை. நானாதேசிகள், அய்யாவொளே ஐஞ்ஞூற்றுவர் ஆகியவிரு கணங்களுங்கூடிய மிகப்பெரியவொரு அமைப்பே நானாதேசித் திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர் என்றழைக்கப்பட்டிருத்தல் வேண்டும். தென்னிந்தியாவிலுள்ள பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்த நானாதேசிகளும் ஐஞ்ஞூற்றுவரும் தம்மிடையே நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தார்கள் என்பதைப்

பலசாசனங்கள் மூலமாக அறியமுடிகின்றது. கர்நாடகத்து அயயாவொளே ஐஞ்ஞூற்றுவர், நானாதேசியர் முதலான பல வணிகர் குழாங்களைத் தம்மோடு இணைத்திருந்தமையும் இங்கு நினைவுகொள்ளத்தக்கதாகும்.

செட்டி வணிகரும் இலங்கையின் வாணிபத்திற் குறிப்பிடத்தக்க அளவிலே பங்கு கொண்டிருந்தார்கள். அவர்களைக் குறிப்பிடும் இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுக்களுட் காலத்தால் மிக முற்பட்டவை பத்தாம் நூற்றுண்டுக்குரியனவாகும். சிரிசங்கபோதி மாராயன் என்னும் பட்டப்பெயரினையுடைய அரசனின் ஐந்தாம் ஆண்டிலும் ஏழாம் ஆண்டிலும் அனுராதபுரத்தில் எழுதப்பட்ட இருசாசனங்கள் முறையே சேக்கிழான் சங்கன் சேக்கிழான் சென்னி என்ற செட்டிவணிகரைக் குறிப்பிடுகின்றன.[38] சோழராட்சிக் காலத்திற் பதவியாவிலே செட்டிகளிருந்தனர். பொலநறுவைக் காலத்து ஐஞ்ஞூற்றுவரின் சாசனங்கள் பலவற்றிலே செட்டி வணிகரின் பெயர்கள் பல காணப்படுகின்றன. ஐஞ்ஞூற்றுவர், நானாதேசியர், வளஞ்சியர், நகரத்தார் ஆகிய கணங்களைச் சேர்ந்த வணிகர் பலர் செட்டிகளாயிருந்தனர். திராவிட மொழிகள் பலவற்றிற் செட்டி என்பது பொதுவாக வணிகரைக் குறிக்குஞ் சொல்லாக வழங்கியமை குறிப்பிடத்தக்கது. பதினொராம் நூற்றுண்டு முதலாகச் செட்டி வணிகர் இலங்கையின் வாணிபத்திற் பங்கு கொண்டிருந்தமையினை பலவாற்றுலும் ஊகித்தறிந்துகொள்ள முடிகின்றது. வடமத்திய மாகாணத்திலும் வடமேற்கு மாகாணத்திலுமுள்ள செட்டி என்னும் சொல்லை முதனிலையாகக் கொண்ட பெருமளவிலான இடப்பெயர்கள் முன்னொரு காலத்திற் செட்டி வணிகரின் குடியிருப்புக்கள் பல அங்கிருந்தமைக்குச் சான்றுகவுள்ளன.

நகரத்தார், பரதேசிகள் என்னும் வணிக கணங்கள் ஒவ்வொன்றினைப் பற்றியும் பொலநறுவைக் காலத்திற்குரிய ஒவ்வொரு சாசனத்திலே கூறப்பட்டுள்ளது. பதினேராம் நூற்றுண்டின் முதற்பகுதியிற் பொலநறுவையில் நகரத்தார் வசித்தனர். கர்நாடகத்திலும் தமிழகத்திலும் நகரத்தார் பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்தனர். பெருந்தொகையான சாசனங்களிலே அவர்களின் நடவடிக்கைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கர்நாடகத்திற் சில சமயங்களிலே அய்யாவொளே ஐஞ்ஞூற்றுவரோடு நகரத்தாரும் இணைந்திருந்தனர். பல்வேறு நாடுகளைச் சேர்ந்த நகரத்தார் திசை ஆயிரத்து ஐஞ்ஞூற்றுவரோடு உறவு கொண்டிருந்தமையினைப் பிரான்மலைச் சொக்கநாதர் கோயிலிலுள்ள சாசனமொன்றின் மேல்வரும் பகுதியின் மூலமாக அறிந்துகொள்ள முடிகின்றது.[39]

'நாடு நகரங்களிற் திசைவிளங்கு திசை ஆயிரத்து ஐஞ்ஞூற்றுவரோமும்
கேரளசிங்க வளநாட்டு அருவிமாநகரான குலசேகர பட்டினத்து
நகரத்தோமும்
துவாராபதி நாட்டு எறிபடை நல்லூர் வடமட்டை நகரத்தோமும்
புறமலை நாட்டுப் புதுத்தெருவான சேரநாராயண புரத்து நகரத்தோமும்
கடலடையாது இலங்கை கொண்ட சோழவளநாட்டு உறத்தூர்க்
கூற்றத்து கொடும்பாளூர் மணிக்கிராமத்து நகரத்தோமும்
திருக்கோட்டியூர் மணியம்பலத்து நகரத்தோமும்
கேரளசிங்க வளநாட்டு அளகாபுரமான செழிய நாராயணபுரத்து
நகரத்தோமும்

ஐயம்பொழில் நாட்டுக் கல்வாயல் நாட்டு சுந்தர பாண்டிய புரத்து
நகரத்தோமும்
களவழிநாட்டு அழகை மாநகரமான ஐயங்கொண்ட சோழப்பெருந்
தெரு நகரத்தோமும்...'

எட்டு நாடுகளைச் சேர்ந்த நகரத்தார் திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவரோடு கூடிச் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. இச்சாசனத்தின் மெய்க்கீர்த்தியானது திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவருடையதாகையால் அதிலே குறிப்பிடப்பெற்ற வணிகர் கணங்கள் எல்லாம் ஐஞ்ஞூற்றுவரின் தலைமையின்கீழே செயற்பட்டனவென்று ஊகித்துக் கொள்ளலாம். மணிக்கிராமத்து நகரத்தோம் என்ற சொற்றொடரானது மணிக்கிராமம் என்ற வணிகரமைப்போடு நகரத்தாருங் கூடியிருந்தனர் என்பதை உணர்த்துகின்றது. நானாதேசியர், திசையாயிரவர், ஐஞ்ஞூற்றுவர் ஆகிய கணங்கள் சில வேளைகளிலே சங்கமமாகி நானாதேசித் திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர் என்ற பேரமைப்பாகியதைப் போல நகரத்தார் மணிக்கிராமம் என்ற கணங்களும் தமிழகத்திலே ஒன்றுசேர்ந்தார்களென்பதற்கு இச்சாசனஞ் சான்றுயுள்ளது, ஐஞ்ஞூற்றுவரின் நினைவின் பொருட்டுப் பெயரிடப்பெற்ற ஐயம்பொழில் நாட்டுக் கல்வாயல் நாட்டுச் சுந்தரபாண்டியபுரத்திலே நகரத்தார் வசித்திருந்தமை அவர்கள் ஐஞ்ஞூற்றுவரோடு நெருங்கிய உறவுகளைக் கொண்டிருந்தனர் என்பதை உணர்த்தக்கூடும். ஈழத்து வணிகர் கணங்களின் கல்வெட்டுக்கள் நகரத்தார்பற்றிக் குறிப்பிடாதபோதும் ஐஞ்ஞூற்றுவரின் வாணிப முயற்சிகள் விரிவடைந்ததனைத் தொடர்ந்து நகரத்தாரும் ஈழநாட்டிற்குச் சென்றனர் எனச் சிந்திக்கலாம்.

பரதேசி வணிகர் பன்னிரண்டாம் நூற்றாண்டிலே இலங்கையின் கடல்வழி வாணிபத்திலே ஈடுபட்டிருந்தார்களென்பதை முதலாம் பராக்கிரமபாகுவின் ஊராத்துறைக் கல்வெட்டின்மூலமாக அறியமுடிகின்றது. யாழ்ப்பாணத்திலுள்ள ஊராத்துறையிலே பரதேசிகளிருந்தனர். செட்டிபுத்திரர், கவறை, காமுண்டஸ்வாமி, ஆவணக்காரர் முதலியோர் கர்நாடக தேசத்தில் உற்பத்தியான வணிகர் கணங்களைச் சேர்ந்தவராவர். அவர்களனைவரும் ஐஞ்ஞூற்றுவரின் அமைப்புக்களிலே இடம்பெற்றிருந்தனர். பதின்மூன்றாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட காலத்தில் அவர்கள் இலங்கையிலிருந்தமைக்கு எதுவித சான்றுமில்லை.

## ஈழத்து வீரபட்டினங்கள்

இலங்கையிலே பதினோராம், பன்னிரண்டாம் நூற்றாண்டுகளிற் சுயாட்சியுரிமை கொண்ட பட்டினங்களை அமைத்துக்கொள்ளுமளவிற்குத் தமிழ் வணிக கணங்கள்சில பலமுஞ் செல்வாக்கும் அதிகாரமும் பெற்றிருந்தன. இதுவரை கிடைத்துள்ள சாசனங்களிலிருந்து வணிக கணங்கள் அமைத்திருந்த நான்கு பட்டினங்களைப்பற்றி அறிந்துகொள்ள முடிகின்றது. அவற்றிலொன்று வகால்கட என இந்நாட்களில் வழங்கும் கட்டனேரி என்னும் இடத்திலிருந்தது. ஐஞ்ஞூற்றுவர் கட்டனேரி என்னும் ஊரினைப் பட்டினமாக்கி, அதன் பழம்பெயரை மாற்றி, அதற்கு நானாதேசிய வீரபட்டினம் என்று பெயரிட்டிருந்தார்கள். பதவியாவிலே ஐயம்

பொழில் பட்டினம் என்ற நகரினைப் பதினெண்பூமித் திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர் அமைத்திருந்தனர் என்பதைப் பதவியாவிலுள்ள அவர்களின் சாசனமொன்றின்மூலம் அறியமுடிகின்றது.[40] தக்கிண தேசத்தின் தலைநகரான பாண்டுவாஸநுவரவிற்கு அண்மையில் நானாதேசிய பட்டினமொன்றிருந்தது.[41] அதைப்பற்றிக் குறிப்பிடுஞ் சாசனம் மிகவும் பழுதடைந்துள்ளது. அதன் வரிகளைத் தொடர்ச்சியாக வாசிக்க முடியாதுள்ளமையால் அப்பட்டினத்தைப்பற்றிய விபரங்களை அறிந்துகொள்ள முடியவில்லை. எனினும் அதிலே காணப்படும் நானாதேசி பட்டினம், அருஞ்சிறப்புத் தேசி பதினெண்பூமிப் பட்டினப்பாதை என்ற சொற்றொடர்கள் சாசனம் வைக்கப்பட்டிருந்தவிடத்திலே பட்டினமொன்றை ஐஞ்ஞூற்றுவர் அமைத்திருந்தனர் என்பதை உணர்த்துகின்றன.[42] விகாரேகின்னக் கல்வெட்டும் வீரபட்டினமொன்றை நானாதேசிகள் அமைத்தமையினைப்பற்றிக் குறிப்பிடுகின்றது.[43]

கர்நாடகத்திலும் தமிழகத்திலுமிருந்த வணிகர் பட்டினங்களைப்போல இலங்கையிலிருந்த தமிழ் வணிக நகரங்களும் சில சிறப்புரிமைகளைப் பெற்றிருந்தன. அவர்களின் நடவடிக்கைகளைக் குறிப்பிடுகின்ற தமிழ்க் கல்வெட்டுக்களிலே அரசனின் பெயர் குறிப்பிடப்படாதமை கவனித்தற்குரியதாகும். அரசனைப்பற்றிய குறிப்புக்களுக்குப் பதிலாக ஐஞ்ஞூற்றுவர் பிரஸஸ்தியே சாசனங்களிற் சேர்த்துக்கொள்ளப்பட்டது. ஈழத்து வணிக நகரங்களிலே கட்டனேரியான நானாதேசிய வீரப்பட்டினமே பிரபலமானதாகும். அது வகால்கட வாவியின் அண்மையில் அமைந்திருந்தது. பொலநறுவைக் காலத்தில் நீர்ப்பாசன வசதிகள் முன்னேற்றமடைந்ததன் காரணமாக இலங்கையின் வடகிழக்குப் பகுதியில் விவசாயம் சிறப்புற்றிருந்தது. அதன் பயனாக வளம் பெருகியதால் வாணிபத்தில் முன்னேற்றம் ஏற்பட்டிருத்தல்வேண்டும் திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர் மக்கள் நடமாட்டம் மிகுந்ததாயும் மத்திய நிலையமாகவும் அமைந்திருந்த வகால்கட என்னும் கட்டனேரியில் ஏற்படுத்தியிருந்த வணிக நிலையங்கள் காலப்போக்கில் நகரமாக வளர்ச்சியடைந்தன. அந்நகரத்திலே ஐஞ்ஞூற்றுவர் ஆதிக்கம் பெற்றிருந்தார்கள். அத்துடன் அவர்கள் அதனை நானாதேசிய வீரபட்டினம் எனப் பெயரிட்டு அதன்மேல் அதிகாரஞ் செலுத்தினார்கள்.

'தேசிப்பகை கூத்திப்பெருமானுக்கு தண்டம் இறுத்துத் தளற்சிப் பட்டமையில் பதிநெண் பூமி நாட்டுச் செட்டிகளும் வீரக்கொடியோமும் இப்பட்டினம் அழிவுபடலாகாதென்று பின் முறை இட்டமக்களும்...[44]' என்ற வகால்கட சாசனப் பகுதியால் நானாதேசிய பட்டினமானது கூத்திப் பெருமான் என்பவனுக்குத் திறைசெலுத்த நேர்ந்ததென்றும் அதனால் அப்பட்டினம் பலவீனமடைந்ததென்றும் உய்த்துணர முடிகின்றது. கூத்திப் பெருமானைப்பற்றி வேறொன்றுந் தெரியவில்லை. அவனைத் தேசிப்பகை என்று சாசனங் குறிப்பிடுவதாலும் அவனுக்குக் கொடுத்த முதலைத் தண்டம் என்று வணிகர் கருதியதாலும் கூத்திப் பெருமான் சிவபெருமானல்லன் என்பது ஓரளவிற்குத் தெளிவாகின்றது.[45] அவன் வணிகர்மீது பகைமையுற்ற பலம்மிக்க அதிகாரியாகவோ பிரதானியாகவோ விளங்கினன் என்று சிந்திக்கலாம். வணிக நகரங்கள் அவற்றின் செல்வச் செழிப்பினாற் படையெடுப்பாளரதும் பிறரதும் கவனத்தைப் பெற்றன. சமுதாயத்தில் அமைதியின்மை

யும் இராஜகமும் மேலோங்கியிருந்த காலப்பகுதியில் கூத்திப்பெருமான் என்பவன் கட்டனேரி வணிகரை வற்புறுத்தி அவர்களின் செல்வங்களைப் பெருமளவிலே தண்டமாக அபகரித்திருத்தல் வேண்டும். பட்டினங்களையும் வழிப்பாதைகளிற் செல்வோரையுஞ் சூறையாடுவதற்குத் தங்கள் படையாட்களுக்கு அனுமதி வழங்கியதன்மூலம் மன்னருமே மக்களுக்குத் தீங்கிழைத்தனரென்று விக்கிரமபாகுவின் காலத்தைக் குறித்துச் சூளவம்சம் கூறுவது இங்கு நினைவுகொள்ளத் தக்கனவாகும்.[46]

வீரபட்டினம் அழிவுபடலாகாதென்று பதினெண்பூமி நாட்டுச் செட்டிகளும் வீரக்கொடியும் முறையிட்டதன் காரணமாக வீரபட்டினத்து ஆளுங் கணமானது கூடிச் சில நடவடிக்கைகளை மேற்கொண்டதென்பதை வகால்கட கல்வெட்டின் வாயிலாக அறிய முடிகின்றது.

(1) செட்டி பாளி தக்கிண பதினெண்பூமி நாட்டுச் செட்டி தேசிய மண்டை அழகிய மணவாளரான மூன்றுதரமலைக் கலங்காத கண்ட நாட்டுச் செட்டியாரான தேசிக்கு இன்னுதான் வடக்குச் செட்டியார் (2) பெற்றான் வீதிவிடங்கனான அடைக்கல நாட்டுச் செட்டி (3) வேளான் அம்பலக் கூத்தனான விரகன் (4) தேவன் உடையாரான விரகன் சேனுபதிச் செட்டியார் (5) செட்டி தேவன் மூன்றுதரம் திண் கலங்காத கண்ட ஐஞ்ஞூற்றுவர் விடானான விரகன் (6) சோறுடை அப்பன் (7) அறிஞ்சி குழைச்சானான மாந்தை தோணக்கார கணத்தார் பட்டவர்த்தனம் (8) கண்டன் அடைமான் நூருயிரனான மதிவிரகன் சேனுபதி ஆண்டான் (9) செங்கண்மாலரான தேசிபிஞ்ஞன் (10) வீதிராசனான விக்கன் இழபியானை (11) தலைத்தலாலுகன்ற தேசி பட்டவர்த்தனம் (12) கண்டன் ஐயங்கொண்டானான மடிகையாண்டான் (13) சேந்நன் எதிராளன் மல்லனான தேசிமதவாரணம் (14) சித்த சாத்தனான 'வளஞ்செயர்' சேனுபதி வளஞ் செயாண்டான் (15) கோணன் மாதவனான வலங்கையாண்டான் (16) பட்டாலகன் தேவனான மும்மதக்களிறு (17) ஊன் இந்நாதான் தேசி சங்கன் (18) அக்கசாலை விக்கரமாத்தனான இளஞ்சிங்கம் (19) கணவதி சோழனான விட்டம் முரிபரன் என்போர் கூடிப் பட்டினத்தைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளைக் குறித்து ஆராய்ந்தனர்.[47]

இப்பத்தொன்பதின்மரும் 'வீரபட்டினம் ஆகையும்' என்று வர்ணிக்கப்படுவதால் அவர்கள் பட்டினத்தின் அதிகாரி சபையாக, ஆளுங் கணமாக பிரதிநிதித்துவ அடிப்படையிலே அமைந்திருந்தனர். நானாதேசித் திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர் கணத்தின் தலைவர்களாயுள்ள வணிகர் பலரும் பட்டினத்தின் பிரதான நிர்வாக அதிகாரிகளும் வணிகர் கணத்தின் ஆதரவிலுள்ள படைத் தலைவர்களும் அதிலே சேர்ந்திருந்தமை கவனித்தற்குரியதாகும்.

வீரபட்டினத்தின் ஆளுங் கணத்தைச் சேர்ந்தவர்களிற் சிலர் நிர்வாகத்தின் பொருட்டு வீரபட்டினத்தால் அமைக்கப்பட்டிருந்த பிரதானமான குழுக்களுக்குப் பொறுப்பாயிருந்தனர் என்று கருத முடிகின்றது. சாசனங் குறிப்பிடுகின்ற அறிஞ்சி குழைச்சானான மாந்தை தோணக்கார கணத்தார் பட்டவர்த்தனம், கண்டன் ஐயங்கொண்டானான மடிகையாண்டான், அக்கசாலை விக்கிரமாதித்தனான இளஞ்சிங்கம், வீதிராசனான விக்கன் இழபியானை

என்போர் முறையே மாந்தை தோணக்காரர் கணம், மடிகை, அக்கசாலை, வீதிகளைக் காவல் புரியும் குழு என்பவற்றின் தலைவராயிருந்திருத்தல் வேண்டும்.

மாந்தை தோணக்காரர்பற்றி வகால்கடச் சாசனத்தில் வரும் குறிப்பானது கட்டனேரியான நானாதேசிய வீரபட்டினத்து வணிகர் பரந்தளவிலே வாணிப நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர் என்பதை உணர்த்துவதாயுள்ளது. **மாந்தை தோணக்காரர் பட்டவர்த்தனம்** என்ற சொற்றொடரானது மாந்தையிலுள்ள கப்பலோட்டிகள் கணமொன்றிற்கு அதிபனாயிருந்த ஒருவனையே குறிக்கின்றதெனக் கொள்வது பொருத்தமானதாகும். அவ்வாறாகிற் கட்டனேரியிலுள்ள வீரபட்டினமானது மாந்தைத் துறைமுகத்தினூடாக நடைபெற்ற இறக்குமதி ஏற்றுமதி வாணிபத்திற் பங்குகொண்ட பெருவணிகர் கணங்களைச் சேர்ந்தவர்களைத் தன்னகத்தே கொண்டிருந்திருத்தல் வேண்டும். **மடிகையாண்டான்** என்பது மடிகை என்பதன் அதிகாரியைக் குறிக்கும் தொடராகும். கடவுகளிலும் எல்லைப்புறங்களிலும் பொருட்களை எடுத்துச் செல்வதற்கென அமைக்கப்பட்ட நிலையங்களே **மடிகை** என்று வழங்கலாயின. அவற்றிலே ஆட்சியதிகாரிகள் வணிகரிடமிருந்து கடவுவரிகளைப் பெறுவது வழமையாகும். அநுராதபுரத்திலுள்ளதும் லீலாவதியின் ஆட்சிக்குரியதுமான நானாதேசி வியாபாரிகள்பற்றிக் குறிப்பிடும் சாசனத்திலும் **மடிகய** என்ற சொல் வருகின்றமை குறிப்பிடத்தக்கது.[48] பதினாலாம் நூற்றாண்டிற்குரிய(1344) லங்காதிலக விகாரத்துத் தமிழ்ச் சாசனத்தில், 'புறமடிகையாலும் உள்மடிகையாலும் ஒன்பது துறையாலும் பதினெட்டுந் தேசத்தில் நின்றும் வந்த வாணிபங்களுங் கொண்டுவந்த பல மண்டலச் சரக்குக்கு நூற்றுக்குக் கால் குடுக்கும்படி பதினெண் விஷயமாகக் கூடிவைத்துக் குடுத்த , என வரும் வரிகள் மடிகையென்பது வணிகர் கூடுந்தளமென்பதைத் தெளிவுபடுத்துகின்றது.[49] கண்டன் ஐயங்கொண்டான் மடிக்கைகளுக்குப் பொறுப்பான அதிகாரியாகவிருந்தான் என்பதை வகால்கடவிலுள்ள ஐஞ்ஞூற்றுவரின் சாசனத்தின் மூலமாக அறிய முடிகின்றது.

விக்கிரமாதித்தன் என்பவன் வீரபட்டினத்து அக்கசாலைக்குப் பொறுப்பாக விருந்தான். அக்கசாலை என்பது பொதுவாகக் காசு அச்சிடப்படும் சாலையைக் குறிக்கும். ஆனால் வணிக கணங்கள் நாணயங்களைத் தாமாகவே உற்பத்தி செய்தமைக்குச் சான்றுகள் காணப்படவில்லை. அவற்றால் அமைக்கப்பட்டவை என்று கொள்ளத்தக்க நாணயங்களெதுவும் இதுவரை கிடைக்கவில்லை. ஆகையாற் பொன், வெள்ளி முதலிய உலோகங்களைப் பதப்படுத்துகின்ற கம்மாளர் நிலையங்களையே அக்கசாலையென்று இச்சாசனங் குறிப்பிடுகின்றதெனக் கொள்ளவேண்டியுள்ளது. எனவே அக்கசாலை பற்றிய குறிப்பானது கட்டனேரியான நானாதேசிய வீரபட்டினத்திற் கம்மாளரின் உற்பத்தி நிலையங்கள் அமைந்திருந்தன என்று கருதுவதற்கு இடமளிக்கின்றது. அத்தகைய நிலையங்கள் விக்கிரமாதித்தன் என்பவனின் மேற்பார்வையின்கீழ் இயங்கியிருத்தல்கூடும். வீரபட்டினத்தின் எல்லைகளுக்குளமைந்த ஊர்காவல் அப்பட்டினத்து அதிகாரிகளின் கட்டுப்பாட்டிலிருந்தது என்பதை **வீதிராசன்** என்ற பட்டத்தையுடையவனைப்பற்றிய குறிப்பு உணர்த்துவதாயுள்ளது.

பிறிதொரு வீரபட்டினமொன்றைப்பற்றி ஐஞ்ஞூற்றுவரின் விகாரேகின்னச் சாசனம் விபரிக்கின்றது. அச்சாசனத்திலுள்ள வாக்கியங்கள் தெளிவற்றனவாய் இருப்பதால் அதிலே கூறப்பட்ட வீரபட்டினத்தைப் பற்றிய விவரங்களைச் சரியாக அறிந்துகொள்ள முடியவில்லை. 'நானாதேசிகள்......இ(ம்)மாநகரம் அடியிட்டதற்காகவும்' என வருஞ் சொற்கள்மூலமாக வீரபட்டினத்தை நானாதேசிகள் அமைத்தார்கள் என்பது உறுதியாகின்றது. 'பதினெண்பூமி நாடு நானாதேசித் திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர் தண்டியம் உள்ளிட்ட பதினென்பூமிப் பிரகாரம் மிளகும் மிளகங்காய்...... பெருமக்கள் எங்கும் நோக்கிச் செய்து சிறப்பிப்பது நம் உடன்பிறந்தான் சம்பளம் நீக்கி நாளடங்க தேசியாண்டான்டென்றுடை வீரபட்டினத்துக்கு வைப்ப இந்தப் பாதுகைத் தனையிட்டமையின்' என்ற பகுதியானது ஐஞ்ஞூற்றுவர் வாணிபஞ் செய்கின்றவிடங்களில் மிளகு முதலிய பொருட்களை விற்பனை செய்த வணிகரின் இலாபத் தொகையில் அவர்களுடைய சம்பளத்தை நீக்கி மிகுதியை வீரபட்டினத்தின் இருப்பாக வைத்து அவ்வணிகர்களைச் சிறப்பித்தார்கள் என்பதனைக் குறிப்பனவாயமையலாம்.[50] பின்பு பொதுவாகிய காசினைக் கொண்டு வீடுகளை வாங்கி அவர்களுக்குக் கொடுத்துப் பதினெண்பூமிச் செட்டிகளின் இருக்கைக்கு வீரபட்டினம் எனப் பெயரிடப்பட்டு (சாந்தி குலப் பெயரிட்டு) அதனைச் சேர்ந்தவர்களுக்குச் சிறப்புரிமைகளும் (பீடுஞ் சீருமாட்சியதாகவும்) ஆட்சியுரிமையும் அரசுக்குரிய அதிகாரமும் கொடுக்கப்பட்டன. மேலும் மட்டு, புறகு ஆகிய வாத்தியக் கருவிகளை இசைப்பதற்கும் உரிமை கொடுக்கப்பட்டது. இந்நானாதேசிய வீரபட்டினமானது பிரான் சாத்தனான வீரகன் சேனாபதி என்னும் படைத்தலைவனின் சேவையினையுஞ் சிலகாலம் பெற்றிருந்தது.

இலங்கையிலிருந்த நானாதேசித் திசையாயிரவர் ஐஞ்ஞூற்றுவரும் அவர்களோடு கூடியிருந்த பிற வணிக கணங்களும் பல இராணுவப் பிரிவுகளின் சேவைகளைப் பெற்றிருந்தன. அங்கக்காரர், கொங்கவாளர், வீரக்கொடி என்னும் பிரிவினரை வணிகரமைப்புக்கள் உள்ளடக்கியிருந்தன என்பதை ஐஞ்ஞூற்றுவரின் சாசனங்களிலுள்ள மெய்க்கீர்த்திப்பகுதியிலிருந்து அறிந்துகொள்ளலாம். கொங்கு நாட்டிலிருந்து சேர்க்கப்பட்ட வாட்படை வீரர்களே கொங்கவாளரென்று அழைக்கப்பட்டனரென்று கருதலாம். அங்கக்காரரைப்பற்றி அறிந்துகொள்வதற்குத் திருவண்ணாமலையிலுள்ள ஒரு சாசனத்தில் வரும் 'வேளைக்காரன் அஞ்சாதான் அங்கக்காரனேன்' என்ற சொற்றொடர்கள் துணைபுரிகின்றன.[51] வேளைக்காரனாகிய அஞ்சாதான் என்பவன் அங்கக்காரனென்று வர்ணிக்கப்பட்டுள்ளதால் அங்கக்காரர் எனப்படுவோர் ஒரு படைப்பிரிவினர் என்பது தெளிவாகின்றது. அங்கக்காரர் என்போர் மெய்க்காப்பாளரை ஒத்தவொரு காவற் படையினர் என்று கொள்வது பொருத்தமானதாகும்.[52] வேளைக்காரருட் சிலர் அங்கக்காரராயிருந்தபடியால் இலங்கையிலிருந்த வணிக கணங்களைச் சேர்ந்திருந்த அங்கக்காரருட் சிலர் வேளைக்காரராயிருந்திருத்தல்கூடும்.

இலங்கையிலிருந்த வேளைக்காரருக்கும் வளஞ்சியர் நகரத்தார் என்னும் வணிகர் கணத்தவருக்குமிடையில் நெருங்கிய தொடர்புகளிருந்தன என்பதற்குப் பொலநறுவையிலுள்ள வேளைக்காரரின் சாசனஞ் சான்றாயுள்ளது.

அதனுள் இரு வணிக கணங்களை 'எங்கள் மூதாதைகளாயுள்ள வளஞ்செயரையும் எங்களோடு கூடிவரும் நகரத்தாருள்ளிட்டாரையும்' என்றவாறு வேளைக்காரர் குறிப்பிட்டுள்ளார்கள்.[53] 'மூதாதைகள்' என்ற சொல்லானது முன்னோர்கள் என்பதையன்றித் தலைவர்கள், ஆதரிப்பவர்கள் என்ற கருத்துக்களைக் குறிக்கும் வகையில் இச்சாசனத் தொடரிலே வந்துள்ளது என்று கருதலாம். வலங்கை, இடங்கை என்ற தொகுதிகளைச் சேர்ந்த சமூகப் பிரிவுகளிற்குப் பொது விடயங்களைக் குறித்து வளஞ்சியர், நகரத்தார் முதலியவர்கள் தலைமை தாங்குவது வழமையாதலாலும் பொலநறுவையிலிருந்த வேளைக்காரர் வலங்கை, இடங்கை என்றவிரு பிரிவுகளையுஞ் சேர்ந்திருந்தமையாலும் வேளைக்காரருக்கும் வணிகருக்குமிடையிலான சமுதாய உறவுகளின் காரணமாகவே வணிகர் கணங்களைப்பற்றிப் பொலநறுவைச் சாசனங் குறிப்பிட்டுள்ளது என்று கொள்ளலாம். 'ஆயினும் எங்களோடு கூடிவரும் நகரத்தாருள்ளிட்டாரையும்' என்ற குறிப்பானது நகரத்தாரின் காவற்படையினராக வேளைக்காரருள் ஒரு பகுதியினர் சேவை புரிந்தனர் என்ற சிந்தனைக்கு இடமளிகின்றது.

(நானாதேசிய) வீரபட்டினம் என்ற நகரங்களிலே படைப்பிரிவுகள் பிரதானமான பங்கினைப் பெற்றிருந்தன. தங்கள் நகரங்களையும் வாணிப நிலையங்களையும் வணிகர் கூட்டங்களையும் சொத்துடைமைகளையும் பாதுகாத்தற்பொருட்டு வணிக கணங்கள் பல காவற்படைகளைப் பாதுகாப்புச் சேவையில் ஈடுபடுத்தியிருந்தார்கள். பதவியாவிலும், விகாரேகின்னையிலுமிருந்த வீரபட்டினங்களில் **வலங்கைப்** பெரும்படை என்னும் இராணுவப் பிரிவுகளிருந்தன. பதவியாவிலிருந்த அய்யம்பொழில் பட்டினத்திலே ஒன்றுக்கு மேற்பட்ட காவற்படைகள் தங்கியிருந்தன என்பது 'இ(ந்)நகரம் இரண்டாம் மித்துரு கணப் படையாகும்' என்ற சாசனத் தொடராலே உணரப்படுகின்றது.[54] வீரபட்டினங்களுக்குரிய படைகள் சேனாதிபதிகளின் தலைமையின்கீழமைந்திருந்தன. மதிவிரகன் சேனாபதியாண்டான், சித்தன் சாத்தனான வளஞ்செயர் சேனாபதி வளஞ்செயாண்டான், பிரான் சாத்தினன் விரகன் சேனாபதி முதலியோர் அத்தகைய சேனாதிபதிகளாவர்.[55] கட்டனேரியான நானாதேசிய வீரபட்டினத்து நிர்வாகவமைப்பிற் சேனாதிபதிகளுஞ் சேர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வணிக கணங்களின் வாணிப நடவடிக்கைகள்

பொலநறுவைக் காலத்து இலங்கையின் வாணிப நிலைகளின் அடிப்படையில் வணிகர் கணங்களின் நடவடிக்கைகளை ஆராய்ந்தறிவது பொருத்தமானதாகும். அரசாங்கத்திற்கு வாணிபத்தின்மூலமாக அதிக வருமானங் கிடைக்குமாகையால் அரசர்கள் வழமையாகவே வணிகர்களுக்குச் சிறப்புரிமைகளையும் ஆதரவினையும் நல்கினார்கள். மேலும் மிகப் பெறுமதி வாய்ந்தனவாயும் மன்னரின் 'ஏகபோக உரிமை'ப் பொருட்களாயுமுள்ள முத்து, மணி, இரத்தினம், யானைகள், யானைத்தந்தம் முதலிய பொருட்களை விற்பனை செய்வதற்குப் பிறநாட்டு வணிகரோடும் தொடர்பு கொள்வது அரசரைப் பொறுத்தவரையிலோர் இன்றியமையாத தேவையாக இருந்தது.

பொலநறுவைக் காலத்து அரசருட் சிலர் வாணிப வளர்ச்சியால் விளையக்கூடிய நன்மைகளை நன்குணர்ந்திருந்தமையால் வாணிபத்தில் மிகுந்த கவனஞ் செலுத்தினர்கள். முதலாம் விஜயபாகு உறுகுணையில் ஆட்சி புரிந்த காலத்தில் சோழருக்கெதிரான போர்முயற்சிகளுக்குத் தேவையான முதலைத் தேடிக்கொள்ளும் நோக்கத்துடன் அருமண தேசத்தோடு வாணிபஞ் செய்தானென்று சூளவம்சம் குறிப்பிடுகின்றது. பெறுமதி மிகுந்த பொருட்களை அருமணத்திற்கு அனுப்பியதோடு அங்கிருந்து விலையுயர்ந்த புடவைகள், சந்தனம், கற்பூரம் முதலியவற்றைக் கப்பல்கள்மூலமாக அவன் இறக்குமதி செய்தான்.[56] அவ்வாறே முதலாம் பராக்கிரமபாகு தக்கிண தேசத்தில் ஆட்சி புரிந்த நாட்களில் முத்து, இரத்தினம், யானைத் தந்தம், யானைகள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தான்.[57]

வாணிபத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த பொலநறுவைக் கால அரசருட் சிலர் தமிழ் வணிக கணங்கள் சிலவற்ருேடு நல்லுறவு கொண்டிருந்து அவற்றுக்கு ஆதரவும் வழங்கியிருந்தார்கள். யாழ்ப்பாணத்து ஊராத்துறை என்னும் துறைமுகத்திலே தங்கியிருந்த பரதேசிகள் என்னும் வணிக கூட்டத்தவர் அரசனுக்குத் தேவையான யானை, குதிரை என்பவற்றை மரக்கலங்களில் இறக்குமதி செய்திருந்தார்கள் என்பது நயினை தீவுக் கோயிலிலுள்ள பராக்கிரமபாகுவின் கல்வெட்டின்மூலம் அறியப்படுகின்றது. பராக்கிரமபாகு ராசன் பரதேசி வணிகருக்கு எத்தகைய ஆதரவினை அளித்திருந்தான் என்பது மேல்வரும் சாசனப் பகுதியாற் புலனாகின்றது.

> ''ஊராத்துறையில் பரதேசிகள் வந்து இருக்கவேணுமென்றும் அவர்கள் ரகைஷப்பட வேணுமென்றும் பல துறைகளில் பரதேசிகள் வந்து நந்துறையிலே கூடவேணுமென்றும் நாம் ஆனை குதிரை மேல் ஸ்நேகமுண்டாதலால் நமக்கு ஆனை குதிரை கொடுவந்த மரக்கலங் கெட்ட துண்டாகில் நாலத்தொன்று பண்டாரத்துக்குக் கொண்டு மூன்று கூறும் உடையவனுக்கு விடக் கடவதாகவும் வாணிய மரக்கலங் கெட்ட துண்டாகிற் செம்பாகம் உடையவனுக்கு விடக் கடவதாகவும் இவ்வியவஸ்தை சந்திராதித்யதுள்ளதனையுங் கல்லிலுஞ் செம்பிலும் எழுத்து வெட்டுவித்து.....''[58]

ஊராத்துறையிலிருந்த துறைமுக அதிகாரிகளுக்குப் பரதேசிகளைக் குறித்து அரசன் அனுப்பிய ஆணையின் வாசகமே நயினைதீவுக் கல்வெட்டிற் பதிவு செய்யப்பட்டுள்ளமை கவனித்தற்குரியது. ஊராத்துறையிலும் வேறுபல துறைகளிலும் பரதேசிகள் வந்திருந்து வாணிபஞ் செய்யவேண்டுமென்றும் அவர்கள் பாதுகாக்கப்படவேணுமென்றும் அரசன் தனது கட்டளையிற் குறிப்பிட்டுள்ளான். அரசன் வணிகருக்கு ஆதரவினையும் வசதிகளையும் அளிப்பதற்கு நாட்டங் கொண்டிருந்தமையினை இச்சாசனம் உறுதிப்படுத்துகின்றது. பராக்கிரமபாகுவின் பட்டத்தரசியான லீலாவதியின் ஆட்சிக்காலத்தில் தானசாலையொன்றினைப்பற்றிச் சில ஒழுங்குகளை அநுராதபுரத்திலிருந்த நானாதேசி வியாபாரிகளோடு அரசாங்கம் ஏற்பாடு செய்திருந்தது. நானாதேசி வணிகர் தங்கள் வாணிப நடவடிக்கைகளுக்கு அரசாங்

கத்தின் அனுமதியையும் அங்கீகாரத்தையும் ஆதரவையும் பெற்றிருந்தமைக்கு லீலாவதி அவர்களோடு தானசாலையைக் குறித்துச் செய்திருந்த ஏற்பாடு ஓர் எடுத்துக்காட்டாகலாம்.

அரசாங்கத்தோடு அவை கொண்டிருந்த நல்லுறவுகளும் அவற்றின் பரந்தளவிலான தொடர்புகளும் முதலீடு, பாதுகாப்பு, கொள்வனவு, விற்பனவு முதலியன குறித்து அவை உருவாக்கியிருந்த உறுதியான அமைப்புக்களும் தமிழ் வணிக கணங்கள் இலங்கையில் மேன்மை பெறுவதற்கு ஏதுவாயிருந்தன. இலங்கையின் வாணிபத்திலே தமிழ் வணிக கணங்கள் எவ்வளவிற்குப் பங்கு கொண்டிருந்தார்கள் என்பது ஆராய்வதற்குரியதாகும். அவர்களின் சாசனங்களிலே வாணிப நடவடிக்கைகளைப்பற்றி அறிந்து கொள்ளக்கூடிய குறிப்புக்கள் மிக அரிதாகவேயுள்ளன. அவர்கள் அமைத்திருந்த சாசனங்களெல்லாம் வாணிபத்தைப்பற்றியன்றிப் பிற நடவடிக்கைகளைப் பதிவு செய்வதையே நோக்கமாகக் கொண்டிருந்தன. ஆயினும் பொலநறுவைக் காலத்திற்குரிய சிங்கள, தமிழ்ச் சாசனங்களில் வணிகரைப்பற்றியுள்ள குறிப்புக்கள் எல்லாம் தமிழ் வணிகரைப்பற்றியனவாயுள்ளன. எனவே, அவர்கள் இலங்கையின் உள்நாட்டு வாணிபத்திலே பிரதானமான பங்கினைப் பெற்றிருந்தனரென்று கருதலாம்.

இலங்கையின் வடபகுதியான இராசரட்டையில் அமைந்திருந்த அநுராதபுரம், பொலநறுவை, பதவியா போன்ற நகரங்களிலும் மேற்குப் பகுதியான தக்கிணதேசத்திலும் அமைந்திருந்த பராக்கிரமபுரத்திலும் அவற்றின் சுற்றுடல்களிலும் தமிழ் வணிகர் தங்கள் நிலையங்களை அமைத்திருந்தனர். வகால்கட, விகாரேகின்ன, ஹோப்பிற்றிகமு போன்ற பிற உள்ளூர்ப் பகுதிகளிலும் தமிழ் வணிகர் கணங்கள் நிலைகொண்டிருந்தன. மேலும் இப்பகுதிகளிலுள்ள நகர வாழ்க்கையிலும் நகர வளர்ச்சியிலும் அவற்றின் செல்வாக்கு முன்னொரு காலத்திலுங் காணப்படாத அளவிலே ஏற்பட்டிருந்தது. இவ்வணிகர் கணங்களில் முதன்மை பெற்றிருந்த ஐஞ்ஞூற்றுவர் பரந்த அளவிலே வாணிப நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்கள். அவர்களால் அமைக்கப்பட்ட நானாதேசிய வீரபட்டினங்கள் அவற்றுக்கெல்லாம் மத்திய நிலையங்களாய் விளங்கின. வீரபட்டினத்திலிருந்து பல்வேறு திசைகளிலுங் கூட்டங்களாகப் பிரிந்து சென்று ஆங்காங்கு தாவளங்களை அமைத்தும் சந்தைகளிற் கூடியும் வாணிபஞ் செய்தனரென்று கருதுவதற்குச் சாசனக் குறிப்புக்கள் இடமளிக்கின்றன. பொதிகளை ஏற்றிச் செல்வதற்கு அவர்களாற் கழுதைகள் பெரிதும் பயன்படுத்தப்பட்டன. அநுராதபுரத்திலிருந்த நானாதேசிகள் வாசனைச் சரக்குகளையும் விற்பனை செய்தார்கள் என்பதை லீலாவதியின் காலத்துச் சாசனத்தின் மூலம் அறிய முடிகின்றது. விகாரேகின்னக் கல்வெட்டில் மிளகு, மிளகங்காய் என்பவற்றைப் பல்வேறிடங்களுக்குஞ் சென்று கொள்வனவு, விற்பனவு செய்வோரைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஈழத்து வணிகரைப் பற்றிக் கூறும் இரு சாசனங்கள் மடிகை என்ற அமைப்பினைக் குறிப்பிடுகின்றன. நானாதேசி வியாபாரிகள் மடிகையாற் கிடைக்கின்ற வருமானத்தின் ஒரு பகுதியைக் கொண்டு பல வலபி மேதாவி என்னும் தானசாலைக்குத் தேவையான சரக்கு வகைகளை கொடுக்கப் பொறுப்பேற்றனர் எனப்படுவதால் அநுராதபுரத்திலுள்ள மடிகையொன்றில் கடவுவரிகளைச்

சேர்க்கும் உரிமையினை நானாதேசியர் பெற்றிருந்தனர் என்று கருதலாம். அய்யாவொளே வணிகரமைப்புக்களால் இலங்கையில் நன்கறிமுகமாகிய தாவளம், வீரக்கொடி என்னும் சொற்கள் சிங்கள மொழி வழக்கிலும் காலப்போக்கில் இடம்பெறலாயின. சிங்கள மொழியிலே தாவளம் என்ற சொல் பொதிமாடுகள், வணிகர் கூடும் விற்பனை நிலையம் என்பவற்றைக் குறிக்கும். சிங்களவரிற் பலர் வீரக்கொடி என்ற பெயரைப் பெற்றிருத்தல் குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையின் வெளிநாட்டு வாணிபத்திலே தமிழ் வணிக கணங்கள் குறிப்பிடத்தக்க பங்கினைப் பெற்றிருந்தன. அதனை நன்கு புரிந்து கொள்வதற்குச் சர்வதேச வர்த்தகத்தில் இக்காலப்பகுதியில் இலங்கை கொண்டிருந்த பங்கினை இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது. தென்னிந்தியாவிற் சோழப் பேரரசு நிலவிய காலப்பகுதியில் சர்வதேசப் பொருட் பரிவர்த்தனை நிலையம் என்ற வகையில் இலங்கை முக்கியத்துவம் இழந்திருந்தது. சோழராட்சிக்குப் பிற்பட்ட காலத்தில் மாந்தை நகரம் வீழ்ச்சியுற்றது. பதினோராம் நூற்றாண்டின்பின் மாந்தைத் துறைமுகத்திற்குத் தூரதேசங்களிலிருந்து ஆழ்கடல் வழிச் செல்லும் பெருங் கப்பல்கள் வந்திருந்தமைக்குச் சான்றுகளில்லை. ஆழ்கடல் வழியான வாணிபத்தில் ஒரு பிரதான தொடர்பு நிலையம் என்ற நிலையினை இழந்தமையால் மாந்தையில் நகர வாழ்க்கை சீரழிந்தது. கி. பி. 1050 ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட சாசனங்களிலும் இலக்கியங்களிலும் மாந்தையிலுள்ள வணிகரைப்பற்றியோ அங்கிருந்த கட்டிட அமைப்புக்களைப்பற்றியோ குறிப்புக்கள் காணப்படவில்லை. எனவே பதினோராம் நூற்றாண்டின் பிற்பகுதியளவில் பொருட் பரிவர்த்தனை நிலையங்கள் மாதோட்டத்திலிருந்து தென்னிந்தியத் துறைமுகப் பட்டினங்களுக்கு மாற்றப்பட்டன என்று கருதலாம். அதன் விளைவாகத் தமிழகத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான வாணிபத்தில் தமிழ் வணிகர் கணங்களின் பங்கு கூடுதலான அளவிலே ஏற்பட்டிருத்தல் வேண்டும். மாந்தையின் வீழ்ச்சியின் பயனாகவே ஊராத்துறை முக்கியத்துவம் பெற்றிருத்தல் வேண்டும். பன்னிரண்டாம் நூற்றாண்டில் யானை, குதிரை முதலியவற்றை அரசனுடைய தேவைக்கு ஏற்றிச் சென்ற கப்பல்களும் பிற வாணிபக் கப்பல்களும் ஊராத்துறைக்குச் சென்றமை குறிப்பிடத்தக்கது. அங்கு துறைமுகத்தைப் பரிபாலிப்பதற்கான அரசாங்க அதிகாரிகளிருந்தனர் என்பது நயினாதீவுக் கல்வெட்டினால் உணரப்படுகின்றது.

தமிழ் வணிக கணங்கள் சில இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்திலும் பங்கு கொண்டிருந்தன. பரதேசிகள் என்ற வணிகர் ஊராத்துறையிலிருந்து கப்பல்கள்மூலம் பொருட்களை ஏற்றுமதி செய்வதிலும் இறக்குமதி செய்வதிலும் ஈடுபட்டிருந்தார்கள். அரசாங்கம் அவர்களை வரவேற்றுப் பாதுகாப்பளிக்க முற்பட்டிருந்தது. பரதேசிகளைக் குறித்துப் பேராசிரியர் இந்திரபாலா எழுதியுள்ளவை இங்கு கவனிக்கத்தக்கனவாகும்.

> ''ஊராத்துறைத் துறைமுகத்திற்கு அடிக்கடி போய்ச்சென்ற வெளிநாட்டு வணிகரை விளித்து அமைக்கப்பெற்ற நயினாதீவிலுள்ள பராக்கிரமபாகுவின் சாசனம் அரசனுக்கு யானைகளையுங் குதிரைகளையும் ஏற்றிச் சென்ற வாணிபக் கப்பல்களைக் குறிப்பிடுகின்றது.

யானைகள், குதிரைகள் என்பன ஐஞ்ஞூற்றுவர் தாம் கொள்வனவு, விற்பனவு செய்ததாகக் குறிப்பிடுவனவற்றுள் இரு பிரதானமான பொருட்களாகும். தென்னிந்தியச் சாசனங்களிற் குதிரைச் செட்டிகளைப்பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றபோதும் குதிரை வாணிபமானது அராபியர் வசமாயிருந்திருத்தல்கூடும். யானை வர்த்தகமானது தென்னிந்தியர், சிங்களவர், தென்கிழக்காசியர் ஆகியோர் பங்குகொண்டிருக்கக் கூடியவொன்றாகும்.[59]

குதிரை வாணிபம், யானை வர்த்தகம் என்பவற்றைப்பற்றி இங்கு மேற்கோளாகக் கொள்ளப்பட்ட பகுதியிலுள்ள முடிபுகள் பொருத்தமானவையாகக் காணப்படவில்லை. பராக்கிரமபாகுவின் சாசனம் வெளிநாட்டு வணிகரை விளித்து எழுதப்பட்டதென்ற கருத்து தவறானதென்பதை அச்சாசனத்தின் மேல்வரும் பகுதியே ஓரளவிற்குத் தெளிவுபடுத்துவதாயுள்ளது. 'ஊராத்துறையில் பரதேசிகள் வந்து இருக்கவேணுமென்றும் அவர்கள் ரகைஷப்பட வேணுமென்றும் பல துறைகளில் வந்து நம் துறையில் கூடவேணுமென்றும் நாம் ஆனை குதிரைமேற் ஸ்நேக முண்டாதலால் நமக்கு ஆனை குதிரை கொடு வந்த மரக்கலங் கெட்டது துண்டாகில் நாலத்தொன்று பண்டாரத்துக்குக் கொண்டு மூன்று கூறும் உடையவனுக்கு விடக்கடவதாகவும்'

ஊராத்துறைக்குப் பரதேசிகள் வரவேண்டும், அவர்கள் வந்திருந்து வாணிபஞ் செய்யவேண்டும், அவர்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்பன அரசனுடைய எண்ணங்களாயிருந்தன என்பது சாசனத்தின்மூலம் தெளிவாகின்றது. ஆனால் பரதேசிகளை விளித்துச் சாசனம் எழுதப்பட்டதாகச் சாசனத்திற் குறிப்பில்லை. அத்துடன் துறைமுகத்திற்கு வரும் நாவாய்கள் சேதமடையுமிடத்து அவற்றிலுள்ள வாணிபப் பொருட்களை எவ்வாறு பங்கிட வேண்டுமென்றும் அரசன் தனது கட்டளையிலே குறிப்பிட்டிருந்தான். 'நமக்கு ஆனை குதிரை கொடுவந்த மரக்கலங் கெட்ட துண்டாகில் நாலத்தொன்று பண்டாரத்துக்கு கொண்டு மூன்று கூறும் உடையவனுக்கு விடக்கடதாகவும்' எனச் சாசனத்தில் வரும் வசனம் அரசனுடைய கட்டளை வணிகருக்கன்றித் துறைமுகத்து அதிகாரிகளுக்கே அனுப்பப்பட்டதென்பதை உணர்த்துகின்றது. குறிப்பாகப் 'பண்டாரத்துக்கு கொண்டு', 'உடையவனுக்கு விடக்கடதாகவும்' என்ற சொற்றொடர்கள் உடைந்த மரக்கலங்களின் வாணிபப் பொருட்களை நான்கு கூறுகளாகப் பிரித்து அவற்றுளொன்றை அரசாங்கத்திற்குரியதாக எடுத்துக்கொண்டு மிகுதியை உடையவனிடத்தில் விடக்கூடியவர்களுக்கே அரசன் ஆணையிட்டிருந்தான் என்பதை நன்கு தெளிவுபடுத்துகின்றன. அத்தகையவர்கள் வணிகர்களாகவன்றி அவர்கள்மீது கட்டுப்பாடுகளை விதித்து அதிகாரஞ் செலுத்தக்கூடிய துறைமுக அதிகாரிகளாகவே இருந்திருப்பர். அவர்கள் அரசனால் நியமிக்கப்பட்ட நிர்வாக அதிகாரிகளா அல்லது துறைமுகத்திலே சுங்கவரிகளைச் சேர்ப்பதற்கு உரிமை பெற்றிருந்த வணிககண அதிபர்களா என்பதை அறிந்துகொள்வதற்கு வழியில்லை. வணிகர், துறைமுகவாசிகள், அதிகாரிகள் ஆகிய எல்லோருமே அரசனுடைய கட்டளையினை அறிந்துகொள்ள வேண்டுமாதலால் அது கல்லிலும் எழுதப்பட்டிருந்தது.

பிற நாட்டவர்களையும் அந்நிய தேச உற்பத்தியுடையவர்களையும் பரதேசிகள் என்று குறிப்பிடுவது நெடுங்கால வழமையாகும். ஆயினும் பிற நாட்டவரையன்றி ஒரு வணிக கணத்தவரையே நயினாதீவுக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறதென்று கொள்வதற்குத் தக்க காரணமுண்டு. தென்னிந்திய சாசனங்கள்சில பரதேசி என்று வணிக கணத்தைப்பற்றிக் குறிப்பிடுகின்றன. சிலவிடங்களில் அய்யாவொளே ஐநூற்றுவரோடு பரதேசி வணிகருங் கூடியிருந்தனர்.[60] வெளிநாட்டு வாணிபத்திலே ஈடுபட்டிருந்த காரணத்தாற் பரதேசி என்ற வணிக கணத்தின் பெயர் உருவாகியிருத்தல் கூடும். பரதேசி வணிகர், ஐஞ்ஞூற்றுவரோடு சில காலங்களிலே தொடர்பு கொண்டிருந்தமையாலும் ஐஞ்ஞூற்றுவர் யானை, குதிரை முதலியவற்றையும் வாணிபஞ் செய்தார்களென்றும் அவர்களின் சாசனங்கள் குறிப்பிடுவதாலும் நயினாதீவுக் கல்வெட்டுக் குறிப்பிடுகின்ற பரதேசிகள் பரதேசி என்னும் கணத்தைச் சேர்ந்தவர்களென்று கொள்வது பொருத்தமானதாகும். அவர்கள் யானைகளையும் குதிரைகளையும் மரக்கலங்களில் ஏற்றி ஊராத் துறைக்குக் கொண்டுசென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அரசன் தனக்குத் தேவையான யானைகளையும் குதிரைகளையும் பரதேசிகள்மூலமாக இறக்குமதி செய்வித்தான். எனவே குதிரை வாணிபம் அராபியர்வசமாயிருந்ததென்று பேராசிரியர் இந்திரபாலா கூறுவது பொருத்தமற்றதாகும். அராபியர் குதிரை வாணிபங் கருதி இலங்கைக்கு வந்திருக்கவில்லை என்று எவருங் கொள்வதற்கில்லை. ஆயினும் இச்சாசனம் எழுதப்பட்ட காலத்தில், பன்னிரண்டாம் நூற்றுண்டில், அராபியர் குதிரைகளை விற்பனை செய்தற் பொருட்டு இலங்கைக்கு வந்திருந்தார்களென்று ஈழநாட்டு இலக்கியங்களிலோ சாசனங்களிலோ கூறப்படவில்லை. இந்தியப் பிரதேசங்களில் விற்பனையாகிய குதிரைகள் பெரும்பான்மையும் அராபியா, பாரசீகம் ஆகிய நாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யப்பட்டன. அவற்றை அராபிய, பாரசீக வணிகர்களே தென்னிந்தியத் துறைமுகங்களுக்கு நாவாய்களில் ஏற்றிச் சென்றுர்கள். ஐஞ்ஞூற்றுவர், குதிரைச்செட்டி, பரதேசி முதலிய தென்னிந்திய வணிகர்கள் குதிரைகளை அவர்களிடமிருந்து கொள்வனவு செய்து அரசர் பலரிடம் ஒப்படைத்திருக்க வேண்டும். எனவே தென்னிந்தியப் பிரதேசங்களிலும் இலங்கை முதலிய அயல்நாடுகளிலும் நடைபெற்ற குதிரை வாணிபத்தைப் பொறுத்தவரையில் அராபியர், பாரசீகர் ஆகியோருக்கும் தென்னுசிய அரசர்களுக்கும் நடுவிலமைந்த இடைநிலையாளராகத் தென்னிந்திய வணிகர் விளங்கினுர்களென்பது மறுக்க முடியாதவொன்ருகும். அய்யாவொளே ஐஞ்ஞூற்றுவருடன் சில சமயங்களிலே தொடர்பு கொண்டிருந்தவர்களாகிய பரதேசிகள் தென்னிந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான குதிரை வாணிபத்திலே பங்குபற்றினுர்களென்பதை நயினாதீவுக் கல்வெட்டின்மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

இலங்கையின் யானை வர்த்தகத்திலே தென்னிந்திய வணிகர்களோடு சிங்களவரும் தென்கிழக்காசியரும் பங்குபற்றியிருந்திருத்தல்கூடும் என்ற சிந்தனையும் நிதானமற்றதாகும். ஐரோப்பியர் ஆட்சியேற்படுவதற்கு முற்பட்ட காலத்து இலங்கை வாணிபத்தைப்பற்றிய பல விடயங்கள் அறியப்படாதனவாகவும் தெளிவற்றனவாகவுமுள்ளன. இந்தியா, இலங்கை, பர்மா முதலிய நாடுகளிலுள்ள காடுகளில் யானைகள் பெருமளவில் உற்பத்தியாகியிருந்தன. அத்துடன் இந்நாடுகளிலேயே அவை பெரிதும் உப

யோகிக்கப்பட்டன. போர்களிலும் பாரங்களை இழுத்துச் செல்வதற்கும் அரண்மனையோடும் சமயநிறுவனங்களோடும் தொடர்புடைய அலங்கார ஊர்வலங்களிலும் இந்நாடுகளிலே யானைகள் பயன்படுத்தப்பட்டன. இதனால் யானைகளின் வாணிபமானது இந்தியா, இலங்கை, பர்மா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய வலையத்திலுட் பெரும்பாலும் நடைபெற்றது. பன்னிரண்டாம் நூற்றாண்டிலே தென்கிழக்காசியர்கள் யானை வர்த்தகங் குறித்து இலங்கைக்கு வந்தமைக்கு எதுவித ஆதாரங்களும் கிடைக்கவில்லை. வேட்டைத்தளங்களை அமைத்து யானைகளைப் பிடிப்பதிலும், பழக்குவதிலும், பராமரிப்பதிலுஞ் சிங்களவர் பயிற்சி பெற்றிருந்தார்களே தவிர யானைகளை வாணிபஞ் செய்வதில் அவர்கள் ஈடுபட்டிருந்தார்களென்று கொள்வதற்குச் சான்றுகளில்லை. தமிழ் வணிக கணங்கள் இலங்கையிற் பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்த பொலநறுவைக் காலத்தில், பன்னிரண்டாம் நூற்றாண்டில், இலங்கையின் யானை வர்த்தகத்தில் இந்திய வம்சாவழியினரான பரதேசிகள் முதலிய வணிகர் பிரதான பங்கினைப் பெற்றிருந்தனர் என்று கொள்ளலாம். இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான வாணிபத்தில் யானை, குதிரை தவிர்ந்த வேறெப்பொருட்கள் இடம்பெற்றிருந்தன என்பதைப்பற்றி வணிகர் கணங்களின் சாசனங்களிற் குறிப்பிடப்பெறவில்லை. ஆதலால் அவை ஊகித்தறிந்துகொள்ள வேண்டியனவாய் உள்ளன.

பதவியா, வகால்கட போன்ற இடங்களில் அமைக்கப்பட்டிருந்த ஐஞ்ஞூற்றுவரின் வீரபட்டினங்கள் கடல்வழியாக நாவாய்களில் வாணிபப் பொருட்களை ஏற்றுமதி இறக்குமதி செய்த பெருவணிகரோடும் தொடர்பு கொண்டிருந்தன. கட்டனேரியான நானாதேசிய வீரபட்டினம் **மாந்தை தோணக்கார பட்டவர்த்தனம்** என்ற தலைவனையும் உள்ளடக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. மாந்தைத் துறைமுகத்திலிருந்த நாவாய் செலுத்தும் கூட்டத்தவரோடு கட்டனேரியான வீரபட்டினம் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தது என்பதை இதனால் அறிந்துகொள்ள முடிகின்றது. அதேபோல பதவியாவிலிருந்த அய்யம்பொழில் பட்டினமும் கப்பலோட்டும் வணிகரோடு ஏதோ ஒரு வகையிலே உறவு கொண்டிருந்தது. பதவியாவிலுள்ள ஐஞ்ஞூற்றுவரின் சாசனமொன்று **சங்கர மனுதன்** என்றவொருவனைக் குறிப்பிடுகின்றது.[61] பெரும் நாவாய்கள் **சங்கரம்** எனப்பட்டதால் வாணிப மரக்கலங்களை வைத்திருந்தவொருவனையே **சங்கர மனுதன்** என்று சாசனம் குறிப்பிடுகின்றதெனக் கருதலாம். இலங்கையின் உள்நாட்டு வாணிபத்தையும் வெளிநாட்டு வாணிபத்தையும் சில முறைகளில் இணைத்துக் கொள்ளத்தக்க வகையிலே நானாதேசித் திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர் பரந்த கூட்டுறவின் அடிப்படையிலான அமைப்புக்களை ஏற்படுத்தியிருந்தனர். உள்ளூர்ப் புறங்களிலே கொள்வனவு, விற்பனவுகளைச் செய்ததோடு துறைமுகங்களினூடாகப் பொருட்களை இறக்குமதி செய்வதிலும் ஏற்றுமதி செய்வதிலும் ஈடுபட்டிருந்தார்கள்.

### வணிகரின் கலாச்சார நடவடிக்கைகள்

வளமான வாழ்க்கையினையுஞ் செல்வவளங்களையும் பெறும் வாய்ப்பினைப் பெற்ற வணிகர் தங்கள் மேலதிகமான வருமானங்களிற் குறிப்

பிடத்தக்க பகுதியினைச் சமயப் பணிகளுக்கும் பொதுப்பணிகளுக்குஞ் செலவிட்டார்கள். கோயில்கள், பௌத்தப்பள்ளிகள் போன்ற சமய நிறுவனங்களை அமைப்பதிலும் அவற்றை ஆதரிப்பதிலும் அவர்கள் ஆர்வங் கொண்டிருந்தார்கள்.[62] முத்தமிழ், பாடல், ஆடல் என்பவற்றில் அவர்கள் ஈடுபாடு கொண்டிருந்தார்கள் என்பதனை அவர்களின் மெய்க்கீர்த்தி உணர்த்துகின்றது. 'அறம் வளரக் கலிமெலியப் பகை பணிய' என ஐஞ்ஞூற்றுவரின் சாசனங்களில் வருஞ் சொற்றொடர்கள் அறம்பற்றிய சிந்தனைகள் அவர்களைக் கவர்ந்திருந்தன என்பதைக் குறிப்பனவாயுள்ளன. வணிகரமைத்திருந்த பட்டினங்களிலே சமஸ்கிருதம், தமிழ் ஆகிய மொழிகளையும் இலக்கிய வடிவங்களையும் கற்றறிந்து கொள்வதற்கான வசதிகளிருந்தன என்பதற்கு ஐஞ்ஞூற்றுவரின் சாசனங்களும் அவற்றிலுள்ள மெய்க்கீர்த்திகளும் மறைமுகமான சான்றுகளாயுள்ளன.

தமிழ் வணிகர் இலங்கையிலுள்ள சைவக் கோயில்களுக்கும் பௌத்தப் பள்ளிகளுக்கும் நன்கொடை முதலியவற்றைக் கொடுத்து ஆதரவளித்தமையினைப் பல சாசனங்கள் குறிப்பிடுகின்றன. அநுராதபுரத்திலிருந்த இந்துக்கோயிலொன்றில் வருமானத்தைக்கொண்டு நாள்தோறும் திருவமுது இடுவதற்கும் நொந்தா விளக்கொன்றினை எரிப்பதற்குமாகச் சேக்கிழான்சங்கன் என்ற செட்டி வணிகன் 30 ஈழக்காசினைக் குமாரகணத்துப் பேரூரார் என்னும் குழுவினரிடம் முதலிருப்பாக வைத்திருந்தான்.[63] இதற்குப்பின் ஈராண்டுகள் கழிந்த பின்னர், சங்கபோதிமாராயன் என்ற பட்டத்தையுடைய அரசனின் ஏழாமாண்டில் அதே கோயிலில் அதே திருப்பணிகளுக்காகச் சேக்கிழான்சென்னி என்ற வணிகன் 30 ஈழக்காசினைக் குமாரகணத்துப் பேரூராரிடம் முதலிருப்பாக வைத்தான்.[64]

பதவியாவிலிருந்த இரவிகுலமாணிக்க ஈஸ்வரம் என்னுங் கோயிலை அமைத்துக்கொள்வதிலும் ஆதரிப்பதிலும் நானாதேசியரும் பிற தமிழ் வணிகரும் பங்கு கொண்டிருந்தனர். அழகன் வத்தமநான தேசிய்யாயத் துணைச்செட்டி, பதியில் வணிகன் தனியப்பன் என்போரும் அக்கோயிலின் அத்திவாரக் கற்களை நாட்டியிருந்தனர்.[65] அக்கோயிலுக்கு நன்கொடை வழங்கியவர்களின் பெயர்களைக் குறிப்பிடுகின்ற ராசராசனின் சாசனத்தில் நானாதேசியன் கொண்ணுவில் வெண்காடன் என்ற பெயருங் காணப்படுகின்றது. அவன் ஒரு எறிமணியையும் ஒரு வெண்கல மணியையும் கோயிலுக்குத் தானம் பண்ணியிருந்தான்.

பதவியாவிலுள்ள ஐஞ்ஞூற்றுவரின் சாசனங்களிரண்டு அவர்கள் சைவநிறுவனங்களோடு கொண்டிருந்த தொடர்பினைக் குறிப்பிடுகின்றன. அவற்றுளொன்றில் 'நகரை அரனுக்குத் தேசிகளாக்கி' என்ற மொழித் தொடர் வருகின்றது.[66] சிவன் கோயிலொன்றினைப் பரிபாலிப்பதற்கும் அதற்குச் சேவை புரிவதற்கும் வணிகரின் நகரமான அய்யம்பொழில் பட்டினம் பொறுப்பேற்றிருந்தமையினைக் குறிப்பதாய் இம்மொழித் தொடர் அமைகின்றது. வடதனி நங்கைகள்பற்றிய சாசனக் குறிப்பு பதவியாவிலுள்ள காளிகோயில்களுடன் ஐஞ்ஞூற்றுவர் தொடர்பு கொண்டிருந்தமையினை உணர்த்துவதாயுள்ளது[67]. அங்கிருந்த அய்யம்பொழில் பட்டினத்தைச் சேர்ந்த வீரக்கொடி என்போர் கோயிலொன்

றிற்கு விக்கிரகஞ் செய்து கொடுத்தார்கள். பதவியாவிலுள்ள மூன்றும் சிவதேவாலயத்தின் அழிபாடுகளிடையிற் கண்டெடுக்கப்பெற்றதும் பன்னிரண்டாம் நூற்றுண்டிற்குரிய வரிவடிவ அமைப்பிலுள்ளதுமான சாசனமொன்று வணிகரின் சிறப்பினைப்பற்றிப் புகழ்ந்துரைக்கின்றது.[68] அக் கோயிலும் வணிகரின் ஆதரவைப் பெற்றிருந்தது எனச் சிந்திக்கலாம். அய்யம்பொழில் பட்டினத்தைச் சேர்ந்த வணிகர் பதவியாவிலே பல இந்துக்கோயில்களை அமைத்து அவற்றைப் பாதுகாத்துவந்ததுடன் அந் நகரிலேற்பட்ட இந்துக் கலாச்சார வளர்ச்சிக்கும் ஆதரவாயிருந்தனர் என்பது மிகையாகாது.

இலங்கையிலிருந்த தமிழ் வணிகரிற் சிலர் பௌத்த விகாரங்களை அமைத்து அவற்றிற்கு நன்கொடைகளைக் கொடுத்திருந்தார்கள். அநுராதபுரத்திலிருந்த நான்குநாட்டார் சேனுவர்மன் என்ற மன்னனின் ஆட்சிக் காலத்தில் மாக்கோதைப்பள்ளி என்ற விகாரத்தினை அமைத்து அதன் அறக்கட்டளைகளைப் பரிபாலிப்பதற்கும் ஒரு குழுவொன்றினை நியமித்திருந்தார்கள்.[69] பொலநறுவையிலுள்ள பதினொராம் நூற்றுண்டிற்குரிய சாசனமொன்றிலே பதினெண்பூமித் தேசித் திசையாயிரவர் ஐஞ்ஞூற்றுவர் வாழுகின்றவிடத்திலுள்ள பள்ளியொன்றினைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது.[70] அப்பள்ளியானது ஐஞ்ஞூற்றுவரால் அமைக்கப்பட்டிருந்தவொரு பௌத்த விகாரமாயிருத்தல் வேண்டும்.

## உசாவியவையும் குறிப்புக்களும்

1. அய்யாவொளே என்பது ஐகொளே என இந்நாட்களிற் குறிப்பிடப் படும் நகரின் பழம் பெயராகும். அது வாதாபிச் சாளுக்கியரின் பிர தான நகரங்களுள் ஒன்ருகும். வாதாபி சாளுக்கியரின் தலைநகரமாக வும் பிரதான இராணுவத் தளமாகவும் விளங்கியது. அதற்கண்மையி லிருந்த அய்யாவொளே, பெருவணிகர் குழாங்கள் வாழ்ந்த வாணிப நிலையமாகவிருந்தது. அய்யாவொளே நகரில் உற்பத்தியான வணிக கணம் அய்யாவொளே ஐஞ்ஞூற்றுவர் என்ற பெயரைப் பெறலாயிற்று. அவ்வணிக கணத்தவரைக் குறிப்பிடும் சாசனங்களுட் காலத்தால் மிக முற்பட்டவை ஐகொளேயில் உள்ளன. அவை எட்டாம் நூற்ருண்டிற் குரியவை. அய்யாவொளே வணிகர் தாம் சென்றிருந்த இடங்களிலே புதிய வணிக நகரங்களை அமைக்குமிடத்து சில சமயங்களில் அவற் றிற்குத் தக்ஷிண அய்யாவொளே என்று பெயரிட்டிருந்தார்கள். தமிழ்ச் சாசனங்கள் குறிப்பிடும் அய்யம்பொழில் பட்டினம் இத்தகைய தாகும்.

2. K. Indrapala, South Indian Mercantile communities in Ceylon, circa 950 — 1250', **CJHSS**, New Series, Vol. I, No.2, p.102.

3. Ibid, K. A. Nilakanta Sastri, **The Colas**, Madras 1955, pp. 605-606.

4. அருமணத்தின் தலைநகரான பகானில் நானுதேசி வணிகர் தங்கியிருந் தமைக்கு அங்குள்ள அவர்களின் சாசனமொன்று சான்றளிக்கின்றது. சுமாத்திராவில் 1088 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட ஐஞ்ஞூற்றுவரின் சாசனமொன்றுள்ளது. சீனுவின் துறைமுகப் பட்டினங்களிலும் தென் னிந்திய வணிகர் தங்கியிருந்தார்கள் என்பதைச் சில தொல்பொருட் கள் மூலமாக அறிய முடிகின்றது. **The Colas** pp. 596-597; J.Filiozat 'Research in South East Asia and in the Far East'., Proceedings of the First International Conference Seminar of Tamil Studies, Kulala Lumpur, 1966, I, p. 12.

5. A.Appadurai, **Economic Conditions in South India**, Vol I, Madras 1936, pp. 398-402.

6. பல்லவ அரசன் மூன்ரும் நந்திவர்மன் காலத்தில் (844-866) எழுதப் பெற்ற மணிக்கிராமத்து வணிகரின் சாசனமொன்று சீயம்நாட்டிலுள்ள தகுவ-ப என்னுமிடத்திலுள்ளது. மணிக்கிராமத்து வணிகர் பெரு மாள் கோயிலொன்றையும் தடாகமொன்றையும் அந்நாட்டில் அமைத் திருந்தார்கள். K. A. Nilakanta Sastri, **A History of South India**, Oxford University press, Madras, 1958, p. 321.

7. K. A. Nilakanta Sastri, **The Pandyan Kingdom**, Reprint. Swathi Publications Madras, 1973, p. 81.

8. ஐஞ்ஞூற்றுவரின் கன்னடச் சாசனங்களிலும் தமிழ்ச் சாசனங்களிலும் சேர்க்கப்பட்டுள்ள மெய்க்கீர்த்திகளெல்லாம் இச்சொற்றொடர்களைக் கொண்டுள்ளன. ஐஞ்ஞூற்றுவர் ஐஞ்ஞூறு வீரசாசனங்களைப் பெற்றவர்கள், அவர்கள் மூன்று உலகங்களுக்கும் புகலிடமானவர்கள், அவர்களுடைய மார்பகத்தைத் திருமகன் அலங்கரிக்கின்றான் என்பவற்றை இச்சொற்றொடர்கள் குறிக்கின்றன.

9. A History of South India; p. 321.

10. Ibid pp. 321 – 322; Y. Yazadani, **The Early History of the Deecan.**

11. எழு கண்டங்கள், பதினெட்டுத் தேசங்கள் என்பனபற்றிய குறிப்புக்கள் வரலாற்றுச் சார்பற்றவை. அவை பௌராணிக, இலக்கிய மரபுகளைப் பின்பற்றி எழுந்தவை. நாவலந்தீவு முதலான ஏழு கண்டங்களைப்பற்றிப் புராணங்கள் சில கூறுகின்றன. சோழ மன்னரின் மெய்க்கீர்த்திகளிலும் ஏழு கண்டங்கள் பற்றிய குறிப்புக்களுள்ளன. 'பாரேழும், பொழிலேழும் படிபுரக்கும் கிரியேழும் நீரேழும் தனி கவித்து நிறைமதி வெண்குடை நிழற்ற' என்பது மூன்றாம் ராஜ ராஜனின் மெய்க்கீர்த்தியிலுள்ள தொடராகும்.

சிங்களம், சோனகம், சாவுகம் முதலிய தேசங்கள் பதினெட்டென்பது ஒரிலக்கிய மரபாகும். சேர, சோழ, பாண்டிய, மலைய, மகத, கோசல, சௌராஷ்ட்ர, தனுஷ்ட்ர, குரும்ப, காம்போஜ, கௌள்ள (கௌட)லாட்டவர்வ்வர, பரஸ (பாரசீகம்), நோபாள ஆகிய தேசங்களுக்குச் சென்று ஐஞ்ஞூற்றுவர் வாணிபஞ் செய்தனரென்று அவர்களின் சாசனங்கள் குறிப்பிடுகின்றன. ஐஞ்ஞூற்றுவர் பல தேசங்களுக்குச் சென்று வாணிபஞ் செய்தனராயினும் அவர்கள் பதினெட்டுத் தேசங்களுக்குஞ் சென்றிருந்தார்கள் என்று கொள்ள முடியாது. **History of South India**, p. 321.

12. The Colas, p. 597.

13. 'ஸ்வஸ்தி ஸ்ரீ திருச்செல்வம் பெறுக...... புக்கமான அரிவட்டனபுரத்து நானாதேசி விண்ணகர் ஆழ்வார் கோயில் திருமண்டபமுஞ் செய்து திருக்கதவும் இட்டு இந்த மண்டபத்துக்கு நின்றெரிகைக்கு நிலைவிளக்கொன்றும் இட்டேன். மலைமண்டலத்து மகோதையர் பட்டினத்து ஈராயிரன் சிறியனான குலசேகரநம்பியேன், இது ஸ்ரீதன்மம் மலைமண்டலத்தான்' இது மியின்பகானிலுள்ள தமிழ்க் கல்வெட்டின் வாசகமாகும். **EI, VII**, pp. 187–189.

14. **EC, VII**, pp. 158–159, **ARE** 1918, p. 174.

15. T. V. Mahalingam, **South Indian Polity.**

16. V. Venkayya, 'Kottayam Plates of Vira Raghava' **EI, IV.** No. 41, p. 295.

17. வணிக பட்டினம் என்பது கன்னட மொழியில் வணஞ்சு வட்டணம் எனப்படும். **வணஞ்சு** என்பது **வனிஜ** என்ற சமஸ்கிருதச் சொல்லின் திரிபு என்பது நீலகண்ட சாஸ்திரியின் கருத்தாகும். **A History of South India**, p. 321.

18. 'Hulgur Inscriptions of the Reigns of Jayasimha II (Saka 960) and Yadava Kanhara', EI, XVI. No. 25, p. 332.

19. L. D. Barnett Memdapur Inscription of the reegn of Kanhara Saka 1172, EI, XIX, p. 25.

20. The Colas. p. 597.

21. Ibid, p. 610.

22. Ibid, p. 597.

23. பொலநறுவைக்கு அண்மையிலுள்ள ஆனைவிழுந்தான், வதுளை ஆகிய விடங்களிலும் அநுராதபுரத்திலும் உள்ளமையே சிங்களச் சாசனங்களாகும். அநுராதபுரத்திலுள்ள லீலாவதியின் ஆட்சிக் காலத்திற்குரிய சாசனம் நானுதேசி வியாபாரிகளைப்பற்றிக் குறிப்பிடுகின்றது. ஆனை விழுந்தான் என்னுமிடத்திலுள்ள சாசனம் சிங்கள எழுத்துக்களிலுள்ள சமஸ்கிருத மொழியிலமைந்தவொன்றாகும். சாசனம் எழுதப்பட்ட கல்லின் ஒரு சிறிய பகுதிமட்டுமே கிடைத்துள்ளது. அதில் ஐஞ்னூற்று வரின் பிரஸஸ்தியின் தொடக்கப்பகுதி காணப்படுகின்றது.

EZ, II, No. 38, pp. 235-236.

24. வீரக்கொடி பற்றிக் குறிப்பிடுகின்ற மணல்கேணியிலுள்ள சாசனம் இன்னும் வாசித்து வெளியிடப்படவில்லை. வகால்கட, விகாரேகின்ன ஆகியவிடங்களிலுள்ள ஐஞ்னூற்றுவரின் சாசனங்களும் பதவியாவி லுள்ளவொரு சாசனமும் முழுமையாகவிருப்பதோடு ஒரளவிற்கு வாசிக்கக்கூடியனவாயுமுள்ளன. ஐஞ்னூற்றுவரின் சாசனங்களுட் பதவியாவிலுள்ள சாசனங்களிலொன்றும் கல்தேன்பிட்டிய, தெகிய முல்லை ஆகியவிடங்களிலுள்ளவையும் சேதமடைந்துள்ளன.

25. S. Paranavitana, 'A. Revised Edition of the Badulla (Horabora) pillar-Inscripton' EZ, V, pp. 177-189.

26. சமஸ்கிருத சாசனங்களிலும் நூல்களிலும் வணிக்கிராமம் என்று குறிப்பிடப்படும் வணிக கணமே தென்னிந்திய சாசனங்கள் குறிப்பிடும் மணிக்கிராமம் என்பதாகும். '**வணிகர் கணம்** எனப்பொருள்படும் **வணிக்கிராமம்** என்பதன் திரிபே மணிக்கிராமம் என்ற பொதுவான விளக்கம் ஒப்புக்கொள்ளக்கூடியதாகும்' என்பது நீலகண்ட சாஸ்திரி யின் குறிப்பாகும். மணிக்கிராமம் என்பதையே இச்சாசனம் வணிக் கிராமம் எனக் குறிப்பிடுகின்றதென்பது சே. பரணவிதான,

கா. இந்திரபாலா என்போரின் கருத்தாகும். **A History of South India**, p. 321, **EZ**, V, p. 190, **CJHSS** New Series, Vol. I, No, 2, p. 105.

27. **SII**, **IV**, No, 1403, கா. இந்திரபாலா, 'அநுராதபுரத்திலுள்ள நான்குநாட்டார் கல்வெட்டு', சிந்தனை I, (4), சனவரி, 1968, பக்கங்கள் 31-35.

28. **CTI**, pt. **II**. pp. 23-24.

29. **ET**, Vol. I, pt I, p. 33.

30. **CTI**, pt. II, p. 12.

31. இலங்கைத் தொல்பொருட்டிணைக்களத்திலுள்ள சாசனப் படிவம். இலக்கம் 2346.

32. **ARE**, 1922, No. 505, p. 32.

33. **ARE**, 1927, p. 94, No, 598 of 1926.

34. Ibid.

35. **EZ**, 1, p. 180.

36. **CTI**, pt. I, pp. 53-54.

37. **EI**, XIX, p. 56

38. **SII**, Vol. **IV**, p. Nos. 1403, 1404.

39. **SII**, Vol. **IV**, No. 442.

40. CTI, pt. II, p. 20.

41. 'புரந்தர தேசியபட்டன பதினெ(ண்பூமி) வளத்து...', 'அருஞ்சிறப்புத் தேசி பதினெண்பூமி பட்டினப் பாதை' எனத் தெகியமுல்லை சாசனத்தில் வருஞ் சொற்றொடர்கள் பாண்டுவாஸநுவரவிற்கு அண்மையில் வணிக பட்டினமிருந்ததென்பதை உணர்த்துகின்றன. **CTI**, pt. II, p. 16.

42. **CTI**, pt. II, p. 16.

43 விகாரேகின்னக் கல்வெட்டிலே, 'பெருமக்கள் எங்கும் நோக்கிச் செய்து சிறப்பிப்பது நம் உடப் பிறந்தான் சம்பளம் நீக்கி நாளடங்க தேசியாண்டாண்டென்றுடை வீரபட்டினத்துக்கு வைப்ப', '(இம்) மாநகரம் அடியிட்டதற்காகவும்' என வரும் வரிகள் நானுதேசித் திசை

யாயிரத்து ஐஞ்ஞூற்றுவர் விகாரேகின்னப் பகுதியிலே நகரம் ஒன்றை அமைத்திருந்தனர் என்பதையும் அது வீரபட்டினம் எனப்பட்டது என்பதையும் தெளிவுபடுத்துகின்றன.

44. 'தன்றசிபட்டமையில்' என்ற வாசிப்புப் பொருத்தமானதாகத் தோன்றவில்லை. அத்துடன் தன்றசி என்பது பொருளற்றதால் அதனைத் தமிழ் வழக்கிலுள்ள ஒரு சொல்லாகக் கொள்ளவியலாது.

45. கூத்திப்பெருமான் சிவனின் மூர்த்தமாகிய நடராசப் பெருமானையுங் குறிக்கும். ஐஞ்ஞூற்றுவர் அய்யப்பொழில் பரமேஸ்வரியாகிய துர்க்காதேவியை இஷ்டதெய்வமாக வழிபட்டமையாலும் பதவியாவிலுள்ள அய்யம்பொழில் பட்டினத்து ஐஞ்ஞூற்றுவர் அங்கிருந்த சிவன் கோயிலொன்றிற்குச் சேவை புரிந்தமையாலும் அவர்கள் இந்துக்கள் என்பதுஞ் சைவசமயச் சார்புடையவர்களென்பதுந் தெளிவாகின்றன. ஆகையால் தெய்வத்தையன்றி மனிதனையே இச்சாசனங் குறிப்பிடுகின்றது எனக் கொள்ளவேண்டியுள்ளது.

46. சூளவம்சம், *61 : 67.*

47. CTI, pt. I, pp. 53 – 54.

48. அச்சாசனத்தைப் பதிப்பித்த விக்கிரமசிங்க இதனை 'மஸிஸய' என வாசித்துள்ளார்; மடிகய என்றே அது கொள்ளத்தக்கதாகும்.

49. **CTI**. pt. II. p. 78.

50. **CTI**, pt. I. p. 56.

51. அங்கக்காரர் என்போர் தங்கள் எஜமானையும் அவனுடைய இலட்சியங்களையும் தங்கள் உயிரைக் கொடுத்தேனும் பாதுகாத்துக் கொள்வதாகச் சத்தியஞ் செய்துகொள்ளும் வழக்கமுடைய போர்வீரர்களாவார். இவ்வழக்கத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் வேளைக்காரரைப் பெரிதும் ஒத்திருந்தமை கவனித்தற்குரியது. அங்கக்காரர் எனப்படுவோர் கர்நாடகத்திலே உருவாகிப் பின் தமிழகத்திலே அறிமுகமாகிய ஒரு படைப்பிரிவினராயிருத்தல் வேண்டும்.

52. **SII**, Vol. **IV**, No. 1396.

53. **CTI**, pt. II, p. 19.

54. **CTI**, pt. I, pp. 53, 54.

55. சூளவம்சம், *58 : 8 – 9.*

56. சூளவம்சம், *69 : 33.*

57. K. Indrapala, 'The Nainativu Tamil Inscription of Parakramabahu I, **UCR, XXI**, No. 1, April 1963, p. 68.

58. CJHSS, new series, Vol. I, No. 2.

59. **Economic conditions in South India.**

60. CTI, pt. I, p. 55.

61. ஆறு தர்சனங்களையும் நான்கு சமயங்களையும் கற்றுணர்ந்த மேதாவிகளையும் முனிவர்களையும் தாம் போற்றி ஆதரித்ததாக ஐஞ்ஞூற்றுவர் தங்கள் சாசனங்களிலே குறிப்பிடுகின்றனர். 'முத்தமிழ்ப் பாடலொடு ஆடலோவா விழவும் வேழ்வியும் விளங்கிய வீதியிடைத் தெங்கும் பலாவுந் தேமாஞ்சோலையும் சந்தன வேலிச் சண்பகப் பொழிலும் வாழையும் கமுகும் வளர்கொடி முல்லையும் பூவையுங் கிள்ளையும் பொலிவொடு சூழ' என்ற சொற்றொடர்கள் ஐஞ்ஞூற்றுவரின் சாசனமொன்றிலே வருகின்றமையுங் குறிப்பிடத்தக்கது. SII, IV, No. 442.

62. SII, IV, No. 1412.

63. SII, IV, No. 1403.

64. SII, IV, No. 1404.

65. CTI, pt. II, pp. 23-24.

66. CTI, pt. I, p. 55.

67. CTI, pt. I, p. 55.

68. CTI, pt. II, p. 20.

69. SII, Vol, IV, No. 1405.

70. CTI, pt. II, p. 12.

★★★